

# ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள்

ஊடகவியலாளர்களுக்கான கையேடு

## Child Rights under the Media Spotlight

*(A Handbook on Child Rights for Journalists)*


வெளியீடு

தோழமை

உரிமைக்கான தோழமை

நெ.149/42, எல்லையம்மன் கோயில் தெரு,
வண்ணார்துறை, அடையாறு,
சென்னை - 600 020

☎ **044-24462703**

✉ **thozhamai@gmail.com**

**ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள்**
**ஊடகவியலாளர்களுக்கான கையேடு**

குழந்தைகள் குறித்த செய்திகள் மற்றும் நிகழ்வுகளை வெளியிடுவதில் ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள், குழந்தைகளுக்கான சட்டங்கள் சட்டப்பூர்வ அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சுருக்கக் கையேடு


முதல் பதிப்பு : ஜூன் 2023
பக்கங்கள் : 72 பக்கம்
வடிவமைப்பு : ஆனந்தன்
அச்சு : மாணவர் நகலகம், திருவல்லிக்கேணி
ஓவியங்கள் : ஆகாஷ் மூர்த்தி

கையேடு உருவாக்க ஆதரவு:
unicef
for every child

வெளியீடு:
தோழமை
உரிமைக்கான தோழமை

149/42, எல்லையம்மன் கோயில் தெரு,
வண்ணார்துறை, அடையார், சென்னை - 600 020


தோழமைக்கு,
வணக்கம்,
நூலைப் பெற்றுக்கொண்டமைக்கு நன்றி.
நூல் தொடர்பான உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறோம். அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி, thozhamai@gmail.com
இப்படிக்கு,
**அ.தேவநேயன்**
இயக்குநர், தோழமை

# பொருளடக்கம்


நுழையும் முன் ... 5

கருத்துரை ... 8

அணிந்துரை ... 10

வாழ்த்துரை ... 13

**ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள்** ... 17

குழந்தைகள் வரையறை ... 18

மனித உரிமைகள் ... 19

**குழந்தை உரிமைகள் கட்டமைப்பு** ... 21

குழந்தை உரிமைகளின் வகைகள் ... 23

குழந்தைகள் மீதான வன்முறையின் வடிவங்கள் ... 26

சைபர்வெளியில் குழந்தைகள் பாதுகாப்பு ... 30

குழந்தைகளுக்கான சட்டங்கள் ... 34

தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய வழிகாட்டுதல்கள் ... 42

குழந்தை உரிமைகளுக்கான சட்டபூர்வ அமைப்புகள் ... 44

குழந்தைகளுக்கான அரசு நலத் திட்டங்கள் ... 49

**குழந்தை உரிமைகளும் ஊடக நெறியும்** ... 51

செய்தி வெளியீட்டில் செய்ய வேண்டியவையும் செய்யக் கூடாததும் ... 63

உதாரணங்கள் ... 64

குழந்தை உரிமைகள் குறித்த ஃபெல்லோஷிப்
மற்றும் ஆன்லைன் படிப்புகள் ... 65

**அறிந்து அளித்த ஒப்புதல்** ... 67

அறிந்து அளித்த ஒப்புதல் படிவம் –1 ... 68

அறிந்து அளித்த ஒப்புதல் படிவம் –2 ... 70

# நுழையும் முன்...

*“ஒரு சமூகம் அதன் குழந்தையை நடத்தும் விதத்தை விட வேறு எதுவும் அதன் ஆன்மாவைக் கூர்மையாக வெளிப்படுத்தி விட முடியாது”*

**- நெல்சன் மண்டேலா**

குழந்தைகள் அவர்கள் வளரும் சூழல் காரணமாக உடல், மற்றும் மன ரீதியாக எளிதில் தீங்கிழைத்தலுக்கு உள்ளாகிடும் வாய்ப்புள்ளவர்கள். குழந்தைகளைத் தெய்வங்கள் எனக் கொண்டாடும் அதே சமூகம் தான், குழந்தைகளை உழைப்பாளர்களாகவும், திருமணக் கோலத்தில் மணமக்களாகவும், பாலியல் துன்புறுத்தல், சாதி மத ரீதியிலான ஒதுக்கப்படுதலுக்கு உள்ளாக்குகின்றது.

இந்திய மக்கள் தொகையில் 18 வயதுக்கு உட்பட்டவர்களில் மொத்தம் 45 சதவிகிதம் பேர் குழந்தைகள் என 2011ம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரம் நமக்குச் சொல்கிறது. ஆனால் நாட்டின் வாக்குரிமையற்ற இந்த மக்கள் பிரிவின் அனைத்து உரிமைகளும் உறுதிசெய்யப்படுகிறதா? தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2021ம் ஆண்டு தரவின்படி இந்தியாவில் குற்றமிழைக்கப்பட்ட மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை 149404, தமிழ்நாட்டில் அந்த எண்ணிக்கை 6064. குழந்தைகளுக்கான உரிமைகள் ஒருபக்கம் சூரிய அஸ்தமனம் போலச் சந்தடி இல்லாமல் மறைந்துகொண்டிருக்கிறது; மற்றொரு பக்கமோ பெருந்தொற்று பரவுவது போல அவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அவர்களுக்கு எதிராக உளவியல் ரீதியாக, உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, மற்றும் உணர்வு அடிப்படையில் எனப் பல்வேறு வகையான குற்றங்கள் நிகழ்ந்தேறி

வருகின்றன. குற்றம் நிகழ்ந்து அதற்குப் பின் குரல் கொடுப்பதை விடக் குற்றம் நிகழாமல் தடுப்பது சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளாக இருக்கும் பிள்ளைகளின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும். இதில் ஊடகத்தின் பங்கு மிகமிக அவசியம். ஊடகம் ஒரு ஆற்றல் கொண்ட வலிமையான ஆயுதம். மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மனமாற்றம் நோக்கி நகர்த்துவது, பொதுக் கருத்தை உருவாக்குவது என பல்வேறு வழிகளில் ஊடகம் தனது பங்களிப்பை இந்த சமூகத்தில் ஆற்றி உள்ளது. அதற்கு வலிமையான பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

குழந்தை உழைப்பாளர், குழந்தைகள் கடத்தல், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை என அவர்கள் மீதான உரிமை மீறல்கள் குறித்து ஓரளவு ஊடகங்கள் பதிவு செய்கின்றன. ஆனால் அவர்களுக்கு மறுக்கப்படும் சத்தான உணவு, தரமான குடிநீர், சரியான கல்வி? என குழந்தைகள் மீதான உரிமை மறுப்பு (Denial) குறித்து எவரும் பேசுவதில்லை, ஆனால் உரிமை மீறல் அளவுக்கு மறுப்பு குறித்தும் பேசவேண்டும். ஊடகங்கள் குழந்தைகளை பல்வேறு வகையான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களாக, திக்கற்றவர்களாக, சாதித்தவர்களாக, வென்றவர்களாக என வெவ்வேறு விதத்தில் காட்சிப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படும் போது அது அவர்களின் சிறந்த நலனை முன்னிறுத்தியதாக அமைய வேண்டியது அவசியம். என்ன நடந்தது என்பதை விட அது நடக்கக் காரணம் என்ன என்ற புரிதலை ஏற்படுத்துவதே மேலும் பல குழந்தைகள் சாதனையாளர்கள் ஆகிடவும் மேலும் பல குழந்தைகள் மீது வன்முறை நிகழாமல் தடுக்கவும் உதவிடும்.

ஊடகம் இந்த ஆயுதத்தை குழந்தை உரிமை பார்வையில் எவ்வாறு சிறப்பாக ஆற்றலுடன் பயன்படுத்த முடியும் என்பதை விளக்கும் ஒரு முயற்சி தான் இந்தக் கையேடு. குழந்தை உரிமை மீறல்கள் பற்றிய ஒரு புரிதலையும், அதற்கென இருக்கும் சட்டங்கள், நடைமுறைகள், அமைப்புகளின் பணி குறித்தும் விளக்க இந்த கையேடு முனைகிறது. இது ஒரு வழிக்காட்டி தான். சமூகத்தில் நாளும் கிழமையும் நம் குழந்தைகள் சந்திக்கும் பிரச்சனைகள் புதிதுபுதிதாய் முளைக்கின்றன. அதற்கென குழந்தைகளின் மிக சிறந்த நலனை முன்வைத்து நாம் எடுக்கும் தீர்க்கமான முயற்சிகளே குழந்தை உரிமைகளை மீட்டெடுக்கவும், ஊடக களத்தில் ஒரு முன் மாதிரியாகவும் அமையும்.

ஒரு குழந்தை குறித்த செய்தியினைப் பதிவு செய்யும் நபர் வெறும் ஊடகவியலாளராக மட்டும் அல்லாமல் குழந்தை மைய ஊடகவியலாளராக (Child-Centric Journalists), அந்தக் குழந்தையின் பாதுகாவலராக, குழந்தையை வளர்த்தெடுக்கும் ஊடகவியலாளராகச் செயல்படவேண்டும் என்கிற எண்ணத்துடன் அந்தச் செய்தியை வெளியிட வேண்டும். இதைக் கருத்திக் கொண்டு தோழமை அமைப்பானது சர்வதேச அமைப்பான யுனிசெப் ஆதரவுடன் 1000க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களுக்கு குழந்தைகள் தொடர்பான செய்திகளைப் பதிவு செய்யும் பயிற்சிப் பட்டறைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. அதன் நீட்சியாக 'ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தைகள்' என்கிற இந்த கையேட்டையும் பார்க்கலாம். ஊடகவியலாளர்களைச் சிறந்த குழந்தைக் காப்பாளர்களாகக் கொண்டுவரும் நோக்கத்துடன் இந்தக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் தனக்கே உரியத் தனிச்சிறப்போடு மட்டுமல்லாமல் குழந்தைகள் தொடர்பான செய்திகளைக் கொண்டு செல்வதில் உள்ள அறத்தையும் பின்பற்றி செய்தியை கொண்டு செல்ல இது உறுதுணையாக இருக்கும். இந்த புத்தகம் உருவாகிட உறுதுணையாக இருந்த **டாக்டர் அண்ணாதுரை**, மாநிலத் திட்டக்குழு ஆலோசகர் **பேராசிரியர் ஆண்ட்ரூ சேசுராஜ்**, சிசிஆர்டி அமைப்பின் இயக்குநர் **எல்.டி.ஸ்டெக்னா ஜென்சி**, மூத்த பத்திரிகையாளர்கள் **மணி**, **கவிதா முரளிதரன்** மற்றும் **பாரதி தமிழன்**, எழுத்தாளர் **விநோத் ஆறுமுகம்**, தோழமை திட்ட மேலாளர் **ஐஸ்வர்யா**, ஒருங்கிணைப்பாளர் **எஸ்.பிரபாகரன்** மற்றும் தோழமையின் இதர திட்டப் பணியாளர்கள் ஆகியோருக்கு நன்றி. தொடர்ந்து தோழமை அமைப்புக்கு உறுதுணை நல்கிவரும் **யுனிசெஃப்** அமைப்புக்கு நன்றி.

அடுத்த தலைமுறையில் அல்ல இன்றே குழந்தைகள் வாழத் தகுதியான உலகம் நனவாகிட கைகோர்த்து உழைப்போம். அதற்கு இந்தக் கையேடு உதவும் என்ற நம்பிக்கையில் தோழமையுடன் வாழ்த்துகள்.

குழந்தை உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்து பயணிப்போம்.

**– அ.தேவநேயன்**
இயக்குநர், தோழமை

# கருத்துரை

*ஊடகத்தின் ஒளி விளக்கில் குழந்தை உரிமைகள்*
*– காலத்தின் தேவை*
*ஊடகவியலாளர்களுக்கு வெளிச்சம் தரும் கையேடு*

**ஊ**டகங்கள் பல்கிப் பெருகியுள்ள தற்போதைய காலக்கட்டத்தில் செய்திகளுக்கும் பொய்திகளுக்கும் வேறுபாடு காணத் தெரியாமல் தவிக்கும் நிலை அதிகரித்துள்ளது.

டிஜிட்டல் உலகில் பரபரப்பு மற்றும் அதிக பார்வை எண்ணிக்கையை இலக்காய் கொண்டு பொறுப்புணர்வு இல்லாமல் செய்திகளை வெளியிடும் போக்கு கூடுதலாகியுள்ளது வேதனை தரும் கசப்பான உண்மை.

பொறுப்புள்ள ஊடகவியலாளர்களுக்கும், குழந்தைகள் நலன், உரிமை தொடர்பாக பல புரிதல் குழப்பங்கள் உள்ளன. ஊடக தோழர்களுக்கு குழந்தைகள் நலன் தொடர்பாக சரியான புரிதலை மேம்படுத்த யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து தோழமை அமைப்பினர் தொடர்ந்து பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு அதிக எண்ணிக்கையில் பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதும் குறிப்பிடத்தக்கதுமாகும்.

ஊடகத்தின் ஒளி விளக்கில் குழந்தை உரிமைகள் கையேடு மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. குழந்தைகளின் நலன்கள், உளவியல், உரிமைகள், குழந்தைகள் தொடர்பாக செய்தி வெளியிடும் போது கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய நெறிமுறைகள் என மிகமுக்கியமான தகவல்களை யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து தோழமை அமைப்பினர் தமிழில் நூலாக வெளியிட்டிருக்கும் முயற்சியை ஊடகவியலாளர்கள் சார்பில் வரவேற்று மகிழ்வதுடன் பாராட்டவும் கடமைப் பட்டுள்ளோம்.

தமிழகம் முழுவதும் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு இந்த கையேடு சென்று சேரவேண்டும். செய்தி சேகரிக்கும், செய்தியை உருவாக்கும் பணியில் உள்ள ஆசிரியர் குழுவினர் என அனைவருக்கும் இந்த கையேடு நல்ல வழிகாட்டியாகத் திகழும். தொடர்ந்து இது போன்ற ஆக்கப்பூர்வமான பணிகளை முன்னெடுக்கும் தோழமை இயக்குநர் தோழர் தேவநேயன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்கிறோம்.

குழந்தைகளது உரிமைகள், நலன்களை காத்திடும் ஒளி விளக்காய் ஊடகங்களை உருவாக்குவோம், மேம்படுத்துவோம்.

நன்றி!

அன்புடன்
**பாரதிதமிழன்**
மூத்த ஊடகவியலாளர்

# அணிந்துரை

**போ**க்சோ சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதால் அதில் திருத்தங்கள் வேண்டும் என்று பளுத்தூக்கும் வீராங்கனைகளின் குற்றசாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் உத்திரபிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷன் சிங் விடுத்திருக்கும் கோரிக்கைக்கும் போக்சோ சட்டத்தின் கீழ் நாகர்கோவில் காசி என்கிற குற்றவாளிக்கு சாகும் வரையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதற்கும் இடையில் ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள் என்கிற இந்த சிறு கையேட்டு நூலை வாசித்து முடித்திருக்கிறேன்.

25 வருடங்களுக்கும் மேலான ஊடகப் பணியில் வெகு அரிதாகவே குழந்தை சார் உரிமைகள் பற்றி எழுதியிருக்கிறேன் என்கிற குற்றவுணர்வும் கொஞ்சம் எட்டிப் பார்க்கிறது. வெகுஜன ஊடகங்களில் குழந்தை நலன் மற்றும் உரிமை பற்றிய செய்திகள் என்பது பெரும்பாலும் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை, குழந்தைத் திருமணங்கள் போன்ற ஒரு சில வரையறைகளுக்குள் அடங்கிவிடுகிறது. பரபரப்புகளுக்கு பின்னால் அலையும் 24 மணி நேர செய்தி வடிவத்தில் குழந்தைகள் பற்றிய நிதானமான அக்கறையை செலுத்துவதை முக்கியமான ஒன்றாக செய்தியறைகளோ நிர்வாகங்களோ கருதுவதில்லை என்பதுதான் நிதர்சனம்.

செய்தியறைகளில் செய்திகளுடன் தொடர்ந்து இயங்குபவர்களில் பெரும்பாலானோருக்கு கூட குழந்தைகள் நலன்கள் மற்றும் உரிமைகள் பற்றிய தெளிவும் பார்வையும் இருக்குமா என்பது சந்தேகமே.

ஆனால் இது ஊடகங்களின் பிரச்னை மட்டுமல்ல, சமூகத்தில் குழந்தைகளின் இடம் என்ன? குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை பற்றி அல்லது திருமணம் பற்றி பதிவாகும் குற்றங்கள் சரி, பதிவாகாமல் போகும் குற்றங்கள் எத்தனை? குடும்ப சூழலில் குழந்தைக்கான இடம் இது?

ஒரு குழந்தையின் குரல் கேட்கப்படுகிறதா? குழந்தைக்கென்று ஒரு குரல் இருக்கிறது என்பதாவது அங்கீகரிக்கப்படுகிறதா?

இந்திய சமூக சூழலில் நிலவும் குடும்ப அமைப்பில் பெற்றோர் தெய்வத்துக்கு நிகராக வைத்துப் பார்க்கப்படுவதும் அவர்களுக்கு எதிரான ஒரு சொல் கூட மூர்க்கத்தனமாக நசுக்கப்படுவதும் இயல்பான ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எங்கள் குழந்தையை நீங்கள் அடிக்கலாம் என்கிற அனுமதியோடு ஆசிரியருக்கு பிரம்பை பரிசளிக்கும் பெற்றோரின் மனநிலை என்ன? குழந்தைப் பற்றிய, குழந்தை உரிமை மற்றும் குரல் பற்றிய அத்தகைய பெற்றோரின் பார்வை என்ன?

மனைவியை சந்தேகப்படும் கணவன் குழந்தையின் தந்தை யார் என்று கண்டறிய டி.என்.ஏ பரிசோதனைக்காக நீதிமன்றங்களை நாடுவது என்ன விதமான மனநிலை? இப்படியொரு வழக்கில், இந்த மிக தனிப்பட்ட, நெருக்கமான தகவல், குழந்தையின் அடிப்படை உரிமை என்று சொன்ன உச்ச நீதிமன்றம் அப்படியொரு பரிசோதனைக்கு உத்தரவிட மறுத்ததையும் இங்கு அபூர்வமான நிகழ்வாக குறிப்பிட விரும்புகிறேன்.

> *“உங்கள் குழந்தைகள் உங்கள் மூலமாக வந்திருக்கிறார்கள், உங்களிடமிருந்து அல்ல”*

என்று கலீல் கிப்ரான் எழுதி பல பத்தாண்டுகள் கழித்துக் கூட சமூகத்தின் பொதுப் புத்தியில் குழந்தை வளர்ப்பு பற்றியும் குழந்தைகளின் நலன்கள் மற்றும் உரிமைகள் பற்றியும் புரிதலோ அக்கறையோ இல்லை என்பதுதான் உண்மை.

இந்த உண்மையின் பின்னணியில் ஊடகத்தின் செயல்பாடுகளை பார்க்கும் போது பெரிய அதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. சொல்லப் போனால் பரபரப்புகளுக்கு மட்டுமே இடமளிக்கும் ஊடகங்கள் குழந்தைகள் நலன், உரிமை, குரல் சார்ந்த விஷயங்களுக்கு குறிப்பிடத்தக்க ஒரு இடத்தை தரும் என்கிற எதிர்பார்ப்பும் இல்லை.

ஆனால் ஒரு குறிப்பிட்ட சம்பவம் அல்லது நிகழ்வின் போது குறைந்தபட்சம் ஊடகங்கள் அதை எப்படி கையாள வேண்டும், எப்படிப்பட்ட செய்திகளைத் தர வேண்டும், எந்த வகை சொற்களை பயன்படுத்துவது என்பதை ஊடகவியலாளர்கள் தெரிந்து கொள்வது முக்கியம்.

இந்த கையேட்டிலேயே சொல்லப்பட்டிருப்பது போல நிர்பயாவுக்கு இந்திய ஊடகங்கள் வழங்கிய நீதியுணர்வும் தார்மீக நியதிகளும் கத்துவா உள்ளிட்ட பிற அத்துமீறல்களில் கடைபிடிக்கப்படவில்லை என்பது தெளிவு.

அதாவது புது தில்லியில் நடந்து, சர்வதேச கவனத்தைக் கோரினால் அந்த சம்பவம் ஒரு தேசிய அவமானம், சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் நியதிகளோடு அது பற்றிய செய்திகளை வழங்க வேண்டும், ஆனால் தமிழ்நாட்டில் விழுப்புரத்தில் நடந்தால் அது தேசிய அவமானம் இல்லை, அங்கு எந்த நியதியையும் கடைபிடிக்க வேண்டியதில்லை என்று பெரும்பாலான வெகுஜன ஊடகங்கள் முடிவெடுத்தால் அதை மிக அப்பட்டமான இரட்டை நிலைப்பாடு என்றுதானே சொல்ல முடியும்.

ஆனால் அதைத் தாண்டி இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. போதுமான விழிப்புணர்வு இல்லாத ஒரு நிலை. பல நேரங்களில் சரியாக செய்திகளைத் தர வேண்டும் என்று நிஜமாகவே நினைக்கும் ஊடகவியலாளர்களுக்கு கூட போதுமான தகவல்களும் விழிப்புணர்வும் இல்லாத காரணத்தால் அதை செய்ய முடியாமல் போகிறது என்பது துரதிருஷ்டவசமான ஒரு போக்கு.

ஊடகவியலாளர்களிடத்தில், வெகுஜன ஊடகப் பெருவெளியில் உள்ள இந்த இடைவெளியை இட்டு நிரப்பும் ஒரு பெரும் சமூக பங்கை ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள் என்கிற இந்த கையேடு ஆற்றும் என்பது உறுதி.

இந்த கையேடு, ஊடகவியலாளர்கள் மட்டுமின்றி குழந்தை வளர்ப்பு, குழந்தை நலன் மற்றும் உரிமைகள் சார்ந்து இயங்கும் யாரும் வாசித்து தெளிவு பெற வேண்டிய முக்கியமான ஒரு ஆவணமாக இருக்கிறது.

**– கவிதா முரளிதரன்**
மூத்த பத்திரிகையாளர்

# வாழ்த்துரை

இந்த உலகில் எங்கு இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுவதும் அதிகமாக பாதிக்கப்படுவதும் குழந்தைகள்தான். அது போபால் விஷவாயு கசிவானாலும், இலங்கை இனப்பிரச்னையானாலும், கொரோனா துயரங்கள் என்றாலும் அதிகமாக பாதிக்கப்படுவது குழந்தைகள்தான். ஆனால் அரசாங்கங்கள் ஆகட்டும், சிவில் சமூகங்கள் ஆகட்டும், ஊடகங்களாகட்டும், இந்தப் பேருண்மையைக் கண்டுகொள்வதில்லை. நாளைய உலகின் ராஜாக்களும், ராணிகளும் படும் துயரைக் கண்டுகொள்ளாத இந்தப் போக்கு மனித வாழ்வின் முரண்பாடுகளில் ஒன்றுதான்.

இந்தப் போக்கு 1989ம் ஆண்டுகளுக்குப் பிறகு மாறத் தொடங்கியது. உலகின் முன்னணி நாடுகளில் குழந்தைகளை நாம் புறக்கணிப்பது ஏற்புடையதல்ல என்ற எண்ணம் முகிழ்த்து அது செயலாகவும் வடிவெடுக்க ஆரம்பித்தது. குழந்தைகளின் துயரங்கள் எழுத்து உருவிலும், காட்சிப்படுத்தலிலும் பிரதிபலிக்க ஆரம்பித்தன. ஆனால், அதில் வளர்ந்த மனிதர்களை சித்தரிப்பது போல குழந்தைகளையும் சித்தரிப்பது என்ற போக்கு பரவலாக முதலில் இருந்தே மேலெழும்ப ஆரம்பித்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போல ஐக்கிய நாடுகள் மன்றம் ஒரு சமதளமான போக்கை உருவாக்கத் துவங்கியது. அதன் தொடர்ச்சியாக 1980களின்

இறுதியிலிருந்து குழந்தைகள் பற்றிய எந்தத் தரவுகளையும் தகவல்களையும் எப்படி எழுத வேண்டும் என்பது குறித்து ஒரு ஸ்டாண்டர்ட் ஃபார்மட் உருவாக்கப்பட்டது. குற்றச் செயல்களில் ஈடுபடும் குழந்தைகளை குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாக எழுதக் கூடாது, பேசக் கூடாது என்ற கருத்தாக்கங்கள் தோன்றின. இத்தகைய குழந்தைகளை சட்டத்துடன் முரண்படும் குழந்தைகள் என்றுதான் நாம் அழைக்க வேண்டும் என்று கூறப்படுவது இந்தப் போக்கின் ஒரு வழித்தோன்றல்தான். அதே போன்று

தவறு செய்யும் குழந்தைகளை நாம் ஊடகங்களில் சொல்லும்போது அவர்களின் பெயர்கள் முகவரி அவர்களின் பெற்றோர்களின் பெயர்கள் அவர்கள் வசிக்கும் இடங்களில் அடையாளங்கள் விவரங்கள் போன்றவற்றை குறிப்பிடக் கூடாது. இது போன்ற வேறு பல வழிகாட்டு நெறிமுறைகளும் ஊடகவியலாளர்களுக்கு வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலகில் உள்ள அநேகமாக அனைத்து நாடுகளும் இந்தத் தர நிர்ணயத்திற்கு ஒப்புக்கொண்டு குழந்தைகளுக்கான உரிமைகள் என்ற சர்வதேசப் பிரகடனத்தில் கையொப்பமிட்டிருக்கின்றன. அதில் இந்தியாவும் ஒரு நாடு. இந்தக் கையேட்டை ஊடகவியலாளர்கள் தங்கள் கையில் எப்போதும் வைத்திருப்பது அவர்களுக்கும் நல்லது நம் தமிழ் சமூகத்துக்கும் நல்லது இதனை நினைவில் கொண்டு இந்தக் கையேட்டை ஊன்றிப் படிக்குமாறு ஊடகவியலாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மாறிவரும் காலங்களுக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ளாத எது ஒன்றும் ஜீவித்திருக்க முடியாது இதனை நினைவில் கொண்டு இந்த அன்பு வேண்டுகோளை கனிவுடன் பரிசீலிக்குமாறு தமிழ் சமூகத்தின் முக்கிய அங்கமான எனது அருமை ஊடக நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்க வளமுடன்!

நன்றி வணக்கம்.

– **மணி**

மூத்த பத்திரிகையாளர்

## குழந்தைகள் தொடர்பான தமிழ்நாடு – இந்தியா புள்ளி விவரங்கள்

| குறியீடுகள் | தமிழ்நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| பல பரிமாண வறுமையின் நிகழ்வு (%) | 30.5 | 52.7 | OPHI, 2016 |
| வருமானம், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் சமத்துவமின்மையால் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் ஏற்பட்ட இழப்பு (%) | 27 | 32 | IHDI, UNDP, 2011 |
| குழந்தைகள் மக்கள்தொகை (மில்லியன், %) | 22, 29% | 440, 34% | CENSUS 2011 |
| குழந்தைகள் பாலின விகிதம் (CSR) | 878 | 1020 | NFHS-5, 2019-21 |
| 5 வயதுக்குட்பட்ட உடல்வளர்ச்சி உறைவுற்ற குழந்தைகள் (%) | 25.0 | 35.5 | NFHS-5, 2019-21 |
| 6 முதல் 59 மாத வயதுடைய இரத்த சோகை உள்ள குழந்தைகள் (<11.0 கி/டி.லி.)(%) | 57.4 | 67.1 | NFHS-5, 2019-21 |
| முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் (12-23 மாதங்கள்) (%) | 89.2 | 77 | NFHS-5, 2019-21 |
| பி.எம்.ஐ. 18க்கும் குறைவான (15-18) வயதுடைய பெண் பிள்ளைகள் (%) | 35.2 | 44.7 | RSOC, 2013-14 |
| குழந்தை இறப்பு விகிதம் (/ 1000 பிறப்புகளுக்கு) | 12 | 23 | SRS 2018 |
| 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் (/1000 பிறப்புகளுக்கு) | 17 | 36 | SRS 2018 |

| | | | |
|---|---|---|---|
| தாய் இறப்பு விகிதம்(/100,000 பிறப்புகளுக்கு) | 60 | 113 | SRS 2018 |
| மொத்த சேர்க்கை விகிதம் (வகுப்புகள் 1- 8) | 98 | 97.8 | UDISE+ 2019-20 |
| மொத்த சேர்க்கை விகிதம் (வகுப்புகள் 9-10) | 90.5 | 77.9 | UDISE+ 2019-20 |
| மொத்த சேர்க்கை விகிதம் (வகுப்புகள் 11-12) | 73.2 | 51.4 | UDISE+ 2019-20 |
| 18 வயதுக்கு முன்பு திருமணமான தற்போது 22-24 வயதுடைய பெண்கள் (%) | 12.8 | 23 | NFHS-5, 2019-21 |
| உழைப்பில் ஈடுபடுத்தப்படும் 5-14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் (%) | 2.49 | 4.5 | CENSUS 2011 |
| திறந்தவெளி கழிப்பிடங்களைக் கொண்ட வீடுகள் (%) | 43.4 | 45.5 | RSOC 2013-14 |
| குழந்தைகளுக்கு எதிரான மொத்த குற்றங்களின் எண்ணிக்கை (100000 குழந்தைகளுக்கான குற்ற விகிதம்) | 4338 (21) | 128531 (28.9) | NCRB 2020 |
| சட்டத்துடன் முரண்படும் சிறார்களின் மொத்த எண்ணிக்கை (ஒவ்வொரு 100000 குழந்தைகளுக்கான குற்ற விகிதம்) | 3394 (16.4) | 29758 (6.7) | NCRB 2020 |

ஆதாரம்: குழந்தைகளுக்கான தமிழ்நாடு அரசு மாநிலக் கொள்கை 2021

# ஊடகத்தின் ஒளிவிளக்கில் குழந்தை உரிமைகள்

**ஊ**டகங்களில் குழந்தைகள் பற்றிய செய்தி என்றால் அது அதிகமாக அவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை, சுரண்டல், தீங்கிழைத்தல் சார்ந்தவையாகத்தான் இருக்கும். குழந்தைகளின் எண்ணங்களுக்கும் அவர்களின் குரல்களுக்கும் பல நேரங்களில் முதன்மை ஊடகங்களில் இடம் இருப்பதில்லை.

உண்மையான செய்திகளை நேர்மையாகவும் துல்லியமாகவும் சிறப்பாக வழங்கும் பல ஊடகங்களும் குழந்தைகளின் உரிமைகள் சார்ந்த செய்திகள் என வரும்போது மிகவும் தடுமாறுவது நாம் அடிக்கடி காணும் ஒன்று. இதற்கு காரணம் குழந்தைகளின் உலகை நாம் வழக்கமாகப் பார்க்கும் அணுகுமுறையில் அல்லாமல் குழந்தைகளின் உரிமைப் பார்வையில் பார்ப்பதில் ஏற்படும் தடுமாற்றம்தான். குழந்தைகள் சார்ந்த செய்திகளை அவர்களின் உரிமைப் பார்வையோடு செய்தியாக்க, நமக்கு அதிகமான தரவுகள் தேவைப்படுகிறது. குழந்தைகளின் உரிமைகள், அவர்களின் கல்வி, நலவாழ்வு, மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் அவர்கள் மீதான வன்முறை பற்றி செய்திகள் வெளியிட இத்தரவுகள் மிகவும் அவசியம். இத்தரவுகள் நமக்கு எளிதில் கிடைப்பதில்லை அல்லது திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. பல நேரங்களில் அதற்கு நியாயமான காரணங்களும் உண்டு.

குழந்தைகள் உலகம் எவ்வளவு அழகானதோ அதே அளவு எளிதில் தீங்கிழைப்புக்கு உள்ளாகும் தன்மை கொண்டதும் கூட. எனவே குழந்தைகளின் உலகை அணுகும் போது கூடுதல் கவனமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

செய்திகளில் உண்மைத்தன்மையும் துல்லியமும் எவ்வளவு முக்கியமோ அதே அளவு அந்த செய்திகள் நல்ல மாற்றத்தை

விதைப்பதாகவும் இருப்பது அவசியம். குழந்தைகள் சார்ந்த செய்திகள், தரவுகள், தகவல்களை வெளியிடும் போது அவை குழந்தையின் சிறந்த நலனை முன்னிறுத்தியதாக இருக்க வேண்டியது கட்டாயம்.

குழந்தையின் நலனுக்கே முன்னுரிமை என்பது குழந்தையின் உரிமைகளை உறுதி செய்வதற்காக, நாம் எடுக்கின்ற முயற்சி குழந்தையின் நலனை முன்னிறுத்தியதாகவும் அமைய வேண்டும். நமது செயல்கள் குழந்தையின் தற்போதைய சூழலில் இருந்து மீட்டெடுக்கவும் அந்த குழந்தைக்கு மறுவாழ்வு அளிக்கவும், சமூகத்தோடு மீண்டும் சக மனிதனாக உள்ளிணையவும் உதவிடும் வகையில் அமையவேண்டும்.

நமது செயல்கள் எக்காரணம் கொண்டும் குழந்தையை மேலும் கடுமையான சூழலுக்கு உள்ளாக்கிடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியில் முதலில் நாம் குழந்தை உரிமைகளைப் புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

## குழந்தைகள் வரையறை (Who is a Child?)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1949ல் அங்கீகரிக்கப்பட்ட போது 14 வயது நிறைவடையாதவர்களை குழந்தைகள் என அடையாளம் காட்டி குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதைத் தடை செய்தது.

1989ம் ஆண்டு நவம்பர் 20 அன்று ஐ.நா. பொதுக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையையும் அதிலுள்ள விதிகளையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்வதாக 1992 டிச 11 அன்று ஐ. நா. சபைக்கு உறுதியளித்தது. அந்த உடன்படிக்கையின் முதல் விதி 18 வயது நிறைவடையாத அனைவரும் குழந்தைகள் என்பதாகும்.

எனவே இந்திய நாட்டிலுள்ள 18 வயது நிறைவடையாத அனைவரும் குழந்தைகள் என்பதை ஏற்றுக்கொண்ட இந்திய அரசு தனது சட்டங்களிலும் அதனை உறுதி செய்து வருகிறது.

# மனித உரிமைகள் (Human Rights)

மனித உரிமைகள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவசியமானவை, இன்றியமையாதவை. ஒவ்வொரு தனிமனிதனும் உயிர் வாழ்வதற்கும் மாண்போடும் மதிப்போடும் வாழ்வதற்குமான அடிப்படையான தேவைகளே உரிமைகள். இந்த மனித உரிமைகளை மனிதனின் வாழ்விலிருந்து பிரிக்கமுடியாதவை, பிரிக்க கூடாதவை. தனிமனித உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை, சமமானவை.

1948ல் ஐ.நா சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக மனித உரிமைகளுக்கான பிரகடனம் தனி மனிதனின் உரிமைகளுக்கான தரத்தினை உறுதி செய்கிறது.

ஆண் பெண் பேதமின்றி, ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி இன, மொழி, சமய, ஜாதி மற்றும் அனைத்து விதமான பேதங்களையும் கடந்து ஒவ்வொரு தனி மனிதனின் அடிப்படை வாழ்வாதாரத்தினை உயர்த்திப் பிடிக்கும் இந்தப் பிரகடனம் இறையாண்மை கொண்ட அரசுகளின் மீது சட்டப்பூர்வமானப் பொறுப்புகளை உருவாக்கும் தன்மை கொண்டதல்ல என்ற போதும் உலகம் முழுவதிலும் உள்ள அரசுகள் இந்த பிரகடனத்தை ஏற்றுக் கொண்டுள்ளது இதன் மதிப்பினையும் இன்றியமையாத் தன்மையினையும் உயர்த்தியுள்ளது.

ஐ.நா. சபை பல்வேறு பிரகடனங்களையும், உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பல்வேறு சட்டப்பூர்வமான ஆவணங்களையும் வெளியிட்டுள்ளது. இந்தப் பிரகடனங்களும், ஆவணங்களும் மனித உரிமைகளை உறுதி செய்வதற்கான அடிப்படை வரையறைகளையும், தரத்தினையும் கொண்டதாக அமைந்து இந்தப் பிரகடனங்களையும், ஆவணங்களையும் ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளுக்கு தங்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல்பாடுகளை ஆய்வு செய்யும் அளவீடுகளாக அமைந்திருக்கிறது. இந்த வரையறைகளை மீறும் உறுப்பு நாடுகளை கட்டுப்படுத்தக் கூடிய சட்டப்பூர்வமான வழிமுறைகளையும் இந்த ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

மனித உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை. அனைத்து வயதினருக்கும் சமமானவை. பொதுவான மனித உரிமைகள் குழந்தைகளுக்கும் உரியவை. அதே வேளையில் பலவீனமான, எளிதில்

பாதிப்புக்குள்ளாகி விடக்கூடிய நிலையிலுள்ள குழந்தைகளின் சிறப்பான தேவைகள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய சூழல்களை உள்ளடக்கிய தனிப்பட்ட உரிமைகள் அவசியமாகின்றது.

குழந்தை உரிமைகள் மீதான ஐ.நா. உடன்படிக்கை ஒவ்வொரு குழந்தைக்கும் உறுதி செய்யப்பட வேண்டிய உரிமைகளைப் பட்டியலிடுகிறது. அவை:

- குழந்தைகளின் முழுமையான ஆளுமையை வெளிப்படுத்த வாய்ப்புகளைக் கொண்டதாகவும்
- உணவு உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் உறுதி செய்யக் கூடியதாகவும்
- ஒதுக்கப்படுதல் மற்றும் வன்முறைகளிலிருந்து பாதுகாப்பதாகவும் உள்ளது.

குழந்தைகளை ஒரு பொருளாகவோ சமூகத்தின் நீட்சியாகவோ பார்க்காமல் அனைத்து உரிமைகளையும் கொண்ட தனி மனிதனாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற குழந்தைகளைப் பற்றி புதிய புரிதலை உருவாக்குகிறது இந்த ஐ. நா. குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை.

இந்த அணுகுமுறையினால் குழந்தைகளைத் தனி மனிதர்களாக, குடும்பத்தின் ஒரு அங்கமாக, சமூகத்தின் ஒரு தூணாக, வயதிற்கு உரிய அங்கீகாரத்தினை உறுதி செய்து, உரிமைகளோடு கடமைகளையும் பொறுப்புகளையும் இந்த உடன்படிக்கை உருவாக்குகிறது. குழந்தைகளின் உரிமைகளை இவ்வாறு அங்கீகரிப்பதன் மூலம் குழந்தைகள் மீதான ஓர் முழுமையான அணுகுமுறையை உருவாக்குகிறது.

சர்வதேச அளவில் இவ்வளவு விரைவில் இந்த உடன்படிக்கைக்கு கிடைத்துள்ள அங்கீகாரமும் வரவேற்பும், ஏறக்குறைய ஐ. நா. வின் அனைத்து உறுப்பு நாடுகளும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளதும், குழந்தைகளின் உரிமைகளுக்கு குழந்தைகளின் அவசர அவசியத் தேவைகளை அனைத்து நாடுகளும் உணர்ந்திருப்பதைக் காட்டுவதோடு குழந்தைகள் மாண்போடும் கௌரவமாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதையும் உணர முடிகிறது.

உரிமைகள், வசதி உள்ளவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பாகவோ அல்லது சலுகையாகவோ இல்லாமல் அனைத்துக் குழந்தைகளுக்குமான வாழ்வாதாரம் என்பதினை இந்த உடன்படிக்கை உறுதி செய்கிறது.

# குழந்தை உரிமைகள் கட்டமைப்பு
## (Child Rights Framework)

குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை பல்வேறு சர்வதேச மனித உரிமை கோட்பாடுகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. குழந்தைகளின் உரிமைகள் பல்வேறு சர்வதேச மனித உரிமைக்கான ஆவணங்களில் இடம் பெற்றிருந்தாலும் குழந்தைகளின் சிறப்பான நலன்கள் மற்றும் தேவைகளை உரிய கவனத்துடன் உள்வாங்கி அவற்றை சரியான வகையில் முழுமையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் வெளிப்படுத்தி வழிகாட்டும் நெறிமுறைகளுக்கு உட்படுத்தி குழந்தைகளை நாம் பார்க்கும் அணுகுமுறையை நெறிப்படுத்துவதில் இந்தக் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை முக்கியப் பங்காற்றுகிறது.

குழந்தைகளின் மனித உரிமைகள் மீதான தொகுக்கப்பட்ட தெளிவுபடுத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்ட இந்த குழந்தைகள் உரிமை உடன்படிக்கை ஆவணம் குழந்தைகளின் முழுமையான ஆளுமை மற்றும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான சூழலினையும் வழிமுறைகளையும் உருவாக்கித் தருகின்றது.

குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையின் விதிகள் குழந்தைகளின் உரிமைகளைப் பட்டியலிடுவதுடன், உரிமைகளை உறுதி செய்வதற்கான அடிப்படை கோட்பாடுகள், உருவாக்கப்பட வேண்டிய கட்டமைப்புகள் மற்றும் வள ஆதாரங்கள், சிறந்த அளவிலான உயிர்வாழ்தல் மற்றும் வளர்ச்சிக்கான உரிமைகளை உறுதி செய்வதற்குத் தேவையான திறன்கள் மற்றும் ஆதாரங்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் கோடிட்டுக் காட்டி குழந்தை உரிமைகளை உறுதி செய்வதற்கான அடிப்படைத் தரத்தினையும் வலியுறுத்துகிறது. குழந்தைகள் மீதான வன்முறை, இழிசெயல்கள், தனிமைப்படுத்துதல் மற்றும் சுரண்டல்கள் போன்றவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதையும் இந்த உடன்படிக்கை வலியுறுத்துகிறது.

குழந்தைகள் அனைவருக்கும் சமமான உரிமைகள் உண்டு.

ஒவ்வொரு உரிமையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது எனினும் தனித்தனியே இன்றியமையாதது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் குழந்தைகள் மற்றவர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்பதையும் குறிப்பாக பெற்றோரின் பொறுப்புகளை மதிக்க வேண்டும் என்பதையும் அடித்தளமாகக் கொண்டுள்ளது. அதே வேளையில் குழந்தை உரிமைகள் பற்றிய புரிதல் குழந்தைகளின் வயதினையொட்டி மாறுபடும் என்பதையும் உணர்த்துகிறது. உடன்படிக்கை என்பது சட்டப்பூர்வமானது. ஐ.நா. குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையே அனைத்து வகையான சமூக பண்பாட்டு பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்கிய முதல் சர்வதேச உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கை நான்கு முக்கிய கொள்கைகளை அடித்தளமாக கொண்டுள்ளது.

- பாகுபாடுகளைக் கடைப்பிடிக்கக் கூடாது (விதி 2)
- குழந்தையின் சிறந்த நலனை முன்னிறுத்துதல் (விதி 3)
- குழந்தையின் உயிர் வாழ்வதற்கான வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான உரிமைகள் (விதி 6)
- குழந்தையின் கருத்துகளுக்கு வாய்ப்பளித்தல் மற்றும் மதிப்பளித்தல் (விதி 12)

இந்த ஐ.நா. உடன்படிக்கை உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டின் குழந்தைகளுக்கு உறுதி செய்ய வேண்டிய அடிப்படை மனித உரிமைகளை அனைத்து குழந்தைகளுக்கும், அனைத்து இடங்களிலும், எல்லாவிதமான சூழல்களிலும் பட்டியலிடுவதுடன், உயிர்வாழ்ந்திடவும் முழுமையான ஆளுமையுடன் வளர்ந்திடவும், தனிமைப்படுத்துதல், ஒதுக்கப்படுதல் மற்றும் அனைத்து விதமான வன்முறை மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு குடும்ப, சமூக மற்றும் கலாச்சார சூழல்களில் முழுமையாகப் பங்கேற்பதற்குமான உரிமைகளை உறுதி செய்வதற்கான அளவுகோலினையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் முன் வைக்கிறது.

இந்த அளவுகோல்களும் வழிகாட்டு நெறிமுறைகளும் உயர்ந்தபட்ச வாழ்வாதாரத்திற்கான, அதிகபட்ச ஆரோக்கிய வாழ்விற்கான சட்ட, சமூக மற்றும் பொது வாழ்விற்கான உறுதி செய்யப்பட வேண்டிய தரத்தினைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த அளவுகோல்கள் உடன்படிக்கைக்கு இசைவு

தெரிவித்துள்ள ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளின் செயல்களையும் முயற்சிகளையும் ஆய்வு செய்வதற்கான தரத்தினையும் கொண்டுள்ளன.

18 வயது பூர்த்தியாகாத அனைவரையும் குழந்தைகளாக அடையாளம் காட்டும் இந்த உடன்படிக்கை, குழந்தைகளை அனைத்து உரிமைகளையும் கொண்ட சமூகத்தின் தனி நபர்களாகவும், குடும்பத்தின் அங்கமாகவும் பார்க்கிறது. எந்தவொரு சாதி, மத, இன, மொழி, கலாச்சார, வர்க்க குழந்தையாக இருப்பினும் அந்த குழந்தையை சம வாய்ப்புகளும் சம உரிமைகளும் கொண்ட தனி நபராக ஏற்றுக் கொள்ளவும், அவர்களின் கருத்துகளை வெளிப்படுத்த, அவர்களின் குரல் கேட்கப்பட வேண்டும் எனவும் அறுதியிட்டு குறிப்பிடுகிறது.

## குழந்தை உரிமைகளின் வகைகள்
## (Types of Child Rights)

பின்வரும் பட்டியல் குழந்தை உரிமைகள் உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை நான்கு வகையாகப் பார்க்கிறது.

### உயிர் வாழ்வதற்கான உரிமைகள் (Right to Life)

- உயிர் வாழ்வதற்கான, வளர்ச்சிக்கான உரிமைகள் (விதி 6)
- தரமான வாழ்க்கை முறைக்கான உரிமைகள் (விதி 18 & 27)
- பெற்றோரின் வழிகாட்டல் (விதி 5)
- பெயர் மற்றும் தேசிய அடையாளத்திற்கான உரிமைகள் (விதி 7)
- சுய அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை (விதி 8)
- தத்தெடுப்பு உரிமை (விதி 21)
- தத்தெடுப்பிற்குப் பிந்தைய உரிய கண்காணிப்பிற்கான உரிமை (விதி 25)

### வளர்ச்சிக்கான உரிமைகள் (Right to Development)

- வாழ்க்கை மற்றும் வளர்ச்சிக்கான உரிமைகள் (விதி 6)
- ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வுச் சேவைகளுக்கான உரிமைகள் (விதி 24)
- கல்வி, தொழிற்கல்வி மற்றும் வழிகாட்டுதலுக்கான உரிமைகள் (விதி 28)

- ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார செயல்பாடுகளுக்கான உரிமைகள் (விதி 31)
- பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு மற்றும் சமூக இணைப்பிற்கான உரிமைகள் (விதி 39)

**பாதுகாப்பிற்கான உரிமைகள் (Right to Protection)**

- பாகுபாடுகளிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை (விதி 2)
- அந்தரங்கம் பாதுகாக்க உரிமை (விதி 16)
- சித்ரவதை, இழிசெயல்கள் உள்ளிட்ட மனித தன்மையற்ற செயல்களிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை (விதி 37)
- அவமரியாதையில் இருந்து பாதுகாப்பு (விதி 19)
- ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனையிலிருந்து பாதுகாப்பு (விதி 37)
- குழந்தை உழைப்பு முறை உள்ளிட்ட பொருளாதார சுரண்டல்களிலிருந்து விடுதலை (விதி 32)
- போதைப் பழக்கம் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தலில் இருந்து பாதுகாப்பு (விதி 33)
- பாலியல் தொல்லை மற்றும் வன்முறைகளிலிருந்து பாதுகாத்தல் (விதி 34)
- அனைத்து விதமான சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பு (விதி 36)
- குழந்தைக் கடத்தல், விற்பனை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு (விதி 35)

**பங்கேற்பிற்கான உரிமைகள் (Right to Participation)**

- குழந்தைகளின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல் (விதி 12)
- கருத்து தெரிவிக்கும் உரிமை (விதி 13)
- சிந்தனை, மனசாட்சி மற்றும் மதநம்பிக்கைகளுக்கான உரிமை (விதி 14)
- குழுக்கள் அமைத்து ஒன்றிணைதலுக்கான உரிமை (விதி 15)
- உரிய தகவல்கள் பெறும் உரிமை (விதி 17)

## பாதுகாப்பற்ற சூழலில் குழந்தைகள்

குழந்தைகள் அவர்களின் வளர்ந்து வரும் தன்மை மற்றும் இள வயது காரணமாக எளிதில் தீங்கிழைத்தலுக்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர். வலி, காயம், தீங்கு, வன்முறை உள்ளிட்ட அனைத்து விதமான தீங்கிழைத்தல்களுக்கும் ஆளாகக் கூடிய நிலையில் உள்ளனர். பெற்றோர், பெரியோர், பொறுப்புள்ளோரின் தவறான முடிவுகள், செயல்கள், செய்ய மறந்த, மறுத்த காரணங்களாலும், சில வேளைகளில் குழந்தைகள் தங்கள் ஆபத்தான நடத்தையினாலும், அணுகுமுறைகளாலும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். சாதி, மத, பொருளாதார, சமூக மற்றும் திறன் சார்ந்த பாகுபாடுகள் குழந்தைகளின் மீது உடனடி மற்றும் நீண்ட நாள் தாக்கத்தினை உருவாக்கி அவர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்வில் தடையினை ஏற்படுத்தக் கூடும். சில நேரங்களில் இந்தப் பாதிப்பு நிரந்தரமானதாகவும் இருக்கலாம். பாதுகாப்பற்ற சூழல்கள் குழந்தைகளுக்கு உடல், மன, உளவியல், சமூக மற்றும் நல வாழ்வில் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

இளஞ்சிறார் நீதிச் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015 பின்வரும் குழந்தைகளைப் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் என அடையாளப்படுத்துகிறது,

- வீடற்றவர்கள்
- ஆதரவற்று விடப்பட்டவர்கள்
- காணாமல் போன மற்றும் வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள்
- பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்
- உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள்
- போதை மற்றும் குழந்தைக் கடத்தலுக்கு உள்ளானவர்கள்
- பிச்சையெடுக்க வைக்கப்பட்டவர்கள்
- குழந்தைத் தொழிலாளர்கள்
- எச்ஐவி எய்ட்ஸ் உள்ளிட்ட தீவிர நோயால் பாதிக்கப்பட்டவர்கள்
- இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள்
- வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்
- பல்வேறு காரணங்களால் பெற்றோரின் அல்லது பாதுகாப்பாளர்களின் பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்காமல் போன குழந்தைகள்

# குழந்தைகள் மீதான வன்முறையின் வடிவங்கள்
## (Various forms of Violence against Children)

### குழந்தைத் தொழில் முறை (Child Labour)

- குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் ஏழ்மை மற்றும் இயலாமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குழந்தைகளைப் பொருளாதார ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சுரண்டும் நிலையே குழந்தைத் தொழில்முறையாகும்.
- ஏழ்மை, வறுமை, குடும்பச் சூழல், படிப்பு வரவில்லை போன்ற காரணங்களைக் கூறி குழந்தையின் கல்வி உரிமை மறுக்கப்படுவது நியாயப்படுத்தக் கூடாத ஒரு குழந்தை உரிமை மீறல் என்பதுடன் இது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- இது குழந்தையின் உடல் நலம், மன நலத்தைப் பாதிப்பதோடு குழந்தையின் வளமான எதிர்காலத்திற்கு மிகப்பெரிய தீங்காகவும் அமைந்துவிடும். அத்துடன் பணியிடங்களில் அவர்கள் உடல் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகும் வாய்ப்புகளும் அதிகம் உள்ளது.
- குழந்தைகளுக்கு இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் கீழ் குழந்தைகளின் கல்வி கற்கும் வாய்ப்பைத் தடுக்கும் அனைத்து செயல்களும் குற்றமாக கருதப்பட வேண்டும்.
- குழந்தைத்தொழில் மற்றும் வளரிளம் பருவ தொழில்முறை (அகற்றுதல் மற்றும் முறைப்படுத்தல்) திருத்தச் சட்டம் 1986ன் (2016) படியும், இளம்சிறார் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015 ன் படியும் குழந்தை தொழில்முறை தண்டனைக்குரிய குற்றமாகும்

### குழந்தைக் கடத்தல் (Child Trafficking)

- கடத்தல் என்பது கத்தி முனையில், துப்பாக்கி முனையில், கண்ணைக் கட்டி கொண்டு நடப்பது மட்டுமில்லை. ஏழ்மை மற்றும் பாகுபாடுகளின் காரணங்களால் சுரண்டலுக்கு உள்ளாகி பெற்றோர் மற்றும் குழந்தைகள் அறிந்தே தொழில், வாழ்வாதாரம் போன்ற காரணங்களைச் சொல்லி ஏமாற்றி அழைத்துச் செல்வதும் குழந்தைக் கடத்தலே ஆகும்.

- குழந்தைகள் தனியாகவோ அல்லது அவரது குடும்பத்தோடு இணைந்தோ தொழில் மற்றும் வாழ்வாதாரக் காரணங்களுக்காகவும் வாங்கிய கடனை முன் வைத்தும் தங்கள் வழக்கமான வாழ்விடத்தை விட்டு வேறு இடங்களுக்கு அழைத்து செல்லப்படுவதும் குழந்தைக் கடத்தல் ஆகும்.
- இந்த குழந்தைக் கடத்தல், குடும்ப வறுமை, இழந்த வாழ்வாதாரம், கடன் போன்ற காரணங்களால் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இணங்கியே அவர்களின் ஒப்புதலுடனே நடக்கவும் வாய்ப்புண்டு. இது குழந்தைகளின் இல்லாமை மற்றும் இயலாமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சுரண்டலே ஆகும்.
- பாலியல் தொழில், குழந்தைத் தொழில், உடல் உறுப்புகள் திருட்டு, பிச்சை எடுக்க வைத்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக ஆண்டுக்கு ஆண்டு குழந்தை கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வந்தாலும், இவை பெரும்பாலும் வழக்குகளாகப் பதியப்படுவதில்லை.
- பாலியல் குற்றங்களுக்காக பெண் குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்க, பாலியல் குற்றங்களுக்காக கடத்தலை தடுக்கும் சட்டமும் (The Immoral Traffic Prevention Act 1956), இந்திய தண்டனை சட்டமும் குழந்தை கடத்தலை தண்டனைக்குரிய குற்றமாக்கினாலும் இந்த சட்டங்கள் குழந்தைக் கடத்தலை தடுக்கப் போதுமானதாக இல்லை. இந்த நிலையில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட மனிதக் கடத்தல் (தடை, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு) சட்ட முன் வரைவு 2021 இன்றும் கிடப்பில் உள்ளது.

## குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை (Child Sexual abuse)

- இந்திய அரசால் 2007ல் நடத்தப்பட்ட நாடு தழுவிய ஆய்வொன்றில் குழந்தைகள் தங்கள் மீது நிகழ்த்தப்படும் பல்வேறு விதமான பாலியல் வன்முறைகளைப் பட்டியலிட்டனர். அந்த ஆய்வில் பதில் அளித்த குழந்தைகளில் 53% சதவிகிதம் பேர் ஏதோ ஒரு வகையான பாலியல் வன்முறைக்கு உள்ளாகி இருந்தது கண்டறியப்பட்டது. அதிலும் 24% குழந்தைகள் கடுமையான பாலியல் வன்முறைக்கு உள்ளாகி இருந்ததும் தெரிய வந்தது. பெண் குழந்தைகளுக்கு சற்று அதிகமாகவே ஆண் குழந்தைகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி இருந்ததும் அதிர்ச்சியான செய்தியாக இருந்தது.

- குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகளை அவர்களின் குரலில் பதிவு செய்த இந்த ஆய்வு இந்த குழந்தைகள் தங்கள் மீது நிகழ்ந்த பாலியல் வன்முறைகளை யாரிடமும் சொல்ல வில்லை என்பதையும் அப்படியே அவர்கள் தங்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் சொன்னபோதும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இதை வெளியே சொல்லக்கூடாது என அமைதிப்படுத்தப்பட்டதையும் ஆய்வில் குழந்தைகள் பதிவு செய்திருந்தனர்.
- இந்த ஆய்வின் பின்னணியில் குழந்தைகள் மீதான அனைத்து வகையான பாலியல் வன்முறைகளையும் தண்டனைக்குரிய குற்றமாகக் கொண்டு, குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை குறித்த தகவல்களை காவல்துறைக்கு தெரிவிக்காவிட்டால் தண்டனை, பாதிக்கப்பட்ட குழந்தைகள் விசாரணைக்கு உட்படுத்தும்போது குழந்தைகள் மீண்டும் பாதிப்புக்கு உள்ளாகாத வண்ணம் குழந்தை நேய அணுகுமுறைகள், அடையாளங்களை எவ்வகையிலும் வெளியிடக்கூடாது. இது போன்ற பல பாதுகாப்பு அம்சங்களை போக்சோ (POCSO) சட்டம் கொண்டுள்ளது.
- தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்ட 2020ன் அறிக்கை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 99.5% பேர் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏற்கனவே தெரிந்தவர்களே என்ற கொடுமையையும் சொல்லுகிறது.

### போதைக்கு அடிமையாகும் குழந்தைகள் (Children and Drug abuse)

- போதை மற்றும் பிற மயக்கும் வேதிப் பொருட்களுக்கு அடிமையாகும் குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரின் எண்ணிக்கை சராசரியை விட அதிகமாகி வருகிறது.
- இந்தக் குழந்தைகளை இளம்சிறார் நீதிச் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015 (JJ Act) அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் என அடையாளப்படுத்துகிறது.
- வளரிளம் பருவத்தில் இயற்கையாகவே இருக்கும் புதியவற்றை முயற்சித்துப் பார்க்கும் துடிப்பு மற்றும் தனக்கான அடையாளம் தேடும் குணம் போன்ற பல காரணங்களால் எளிதில் போதைக்கு இலக்காகி விடுகின்றனர்.

- வீடின்றி வாழும் குழந்தைகள் தங்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் உள்ளிட்ட கொடுமைகளை சகித்துக்கொள்ளவும், மற்ற சில குழந்தைகள் தங்கள் நட்பு வட்டத்தை தக்க வைத்துக் கொள்ளவும் மேலும் சிலர் தங்கள் தனிமை மற்றும் இழப்பை மறக்கவும் இந்தப் பழக்கத்திற்கு அடிமை ஆகின்றனர்
- தங்களிடம் சிகிச்சைக்கு வந்த பயனாளிகளில் 63.6% பேர் 15 வயதுக்கு முன் போதை பழக்கத்திற்கு அறிமுகமானவர்கள் என்கிறது ஒரு சைல்ட்லைன் தகவல்.
- சமீபமாக ஒரு குறிப்பிட்டப் போதைப் பொருளுக்கு அடிமையாகும் நிலை மாறி ஒரே குழந்தை பல்வேறு விதமான பொருட்களில் தனக்கான போதையை தேடும் நிலை உருவாகி வருவதும் அதிர்ச்சி அளிக்கிறது
- இதுவரை குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் போதை பொருள் பயன்பாடு மற்றும் அவர்களின் மறுவாழ்வு பற்றி ஒரு கொள்கையோ, திட்டமோ உருவாகவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- போதைக்குப் பழக்கப்படும் குழந்தைகள் தங்கள் தேவைகளுக்காக குற்றச் செயல்களில் ஈடுபடவும் தயங்குவதில்லை என்பதை சமீபத்திய NCRB தகவல் உறுதி செய்கிறது

## சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் (Children in need of Care and Protection)

ஐ.நா. மாற்று திறனாளிகளின் உரிமைகள் உடன்படிக்கையின் அடிப்படை கொள்கைகள்

1. மாற்று திறனுடையோரின் உள்ளார்ந்த தனி நபர் கண்ணியத்தையும், அவர்கள் தங்களது சொந்த முடிவுகளை சுயமாக எடுக்கவும், தன்னிச்சையாக செயல்படவுமான சுதந்திரத்தை மதித்தல் வேண்டும்.
2. பாகுபாடற்ற தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
3. சமூகத்தில் முழுமையான உள்ளிணைதல் மற்றும் சிறந்த பங்கேற்பை உறுதி செய்தல் வேண்டும்.
4. மனிதர்களின் பன்முகத்தன்மை மற்றும் மனிதத் தன்மையை மதித்து மாற்றுத் திறனுடையோரையும் அவர்களின் வேறுபாடுகளையும் அங்கீகரித்தல் வேண்டும்.

5. சம வாய்ப்புகள் வழங்குதல் வேண்டும்.
6. அணுகுவது எளிதாக்கப்படல் வேண்டும்.
7. பாலின சமத்துவம் பேணப்பட வேண்டும்.
8. மாற்றுத் திறனுள்ள குழந்தைகளின் வளர்ந்து வரும் திறன்களை மதித்து அவர்கள் தங்கள் அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்கும் உரிமையினை அங்கீகரித்தல் வேண்டும்.

## சைபர்வெளியில் குழந்தைகள் பாதுகாப்பு (Children and Cyber-Safety)

“இன்றைய யுகம் தகவல் யுகம். இணையம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நம் சமூகத்தில் பல புதிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. தகவலும் அறிவும் ஜனநாயக படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏதோ ஒரு கிராமத்தில் இருக்கும் பிள்ளை கூட அமெரிக்காவின் தொழில்நுட்பத்தில் மிக உயர்ந்த பல்கலைக்கழகங்களின் பாடங்களை மிக எளிதாக இணையத்தின் உதவியுடன் பெற முடியும் என்ற நிலை உள்ளது.

இன்றைய இணையம் மற்றும் தகவல் தொடர்பின் வளர்ச்சி ஒரு பக்கம் பிள்ளைகளுக்கு பல நன்மைகளை கொண்டு வந்தாலும் கூடவே பல ஆபத்துகளையும் கொண்டு வந்துள்ளது. நாம் அதன் அடிப்படைகளை பற்றி தெரிந்து கொள்வதன் மூலம் இந்த இணைய உலகில் பிள்ளைகள் எப்படிப் பாதுகாப்புடன் அதன் நன்மைகளை பெறுவார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

## டிஜிட்டல் ஏற்றத்தாழ்வு

இணையத்தில் பிள்ளைகள் தங்களின் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கான பல்வேறு தகவல்கள் இருக்கிறது என்பது உண்மைதான் ஆனால் அந்தத் தகவல்களை இணையத்தில் நுழைந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலை இன்று பல சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதை டிஜிட்டல் ஏற்றத்தாழ்வு எனக் கூறுகிறோம்.

இன்று இணையத்தில் இருந்து தகவலைப் பெறக் குறைந்த பட்சம் ஒரு செல்போன் தேவையாக உள்ளது. செல்போனுடன் இணைய சேவையும் இருந்தால்தான் ஒரு பிள்ளையால் இணையத்தில் நுழைய முடியும்.

செல்போனும் இணைய சேவையும் இருந்தாலும் அவர்கள் இருக்கும் பகுதியில் போதுமான அளவு நல்ல இணைய சேவை இருக்க வேண்டும். வேகம் குறைந்த இணைய சேவை தகவலை பெறுவதில் சிக்கலை ஏற்படுத்துகிறது.

இன்று பல ஏழைப் பிள்ளைகளுக்கு குறைந்த பட்சம் செல்போன் வாங்கவோ அல்லது இணையத்திற்காக மாதம் செலவிடவோ முடிவதில்லை. ஒரு பக்கம் வசதி பெற்ற பிள்ளைக்கு மிக எளிதாக கிடைக்கும் இணைய சேவை ஏழை பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. இதில் வினோதமான இன்னொரு சிக்கல், சென்னை போன்ற பெரு நகரங்களில் இருக்கும் இணைய சேவைகளை போல் கிராமப் பகுதிகளில் இணைய சேவை இல்லை. அதாவது கிராமத்தில் இருக்கும் பிள்ளை பணத்தை செலவழித்தாலும் நல்ல இணையத் தேவை கிடைப்பதில் சிக்கல்கள் உள்ளது.

தகவல் தொழில்நுட்ப உலகில் ஒரு பக்கம் இணையத்தின் தேவைகளை பயன்படுத்தி முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளையுடன், இணைய சேவையை பல்வேறு சமூக பொருளாதார காரணங்களுக்காக பெற முடியாத ஒரு பிள்ளை போட்டி போட வேண்டியுள்ளது. நகரங்களில் படிக்கும் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புகளிலேயே இணையத்தைப் பற்றிய அடிப்படைகளையும், கூகுள் போன்ற தேடு புரியும் உதவியுடன் பள்ளிப் பாடங்களை செய்யவும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

ஆனால் மறுபுறம் கோவிட் போன்ற பெரும் தொற்று காலத்தில் ஆன்லைன் வகுப்புகளுக்கு போதுமான செல்போன் வசதியும், போதுமான இணைய வேகம் இல்லாமல் அடிப்படைக் கல்வியை கூட பெற முடியாத பிள்ளைகள் தமிழ்நாட்டில் அதிகம்.

இணையம் மற்றும் சமூக வலைதளங்களைப் பற்றி நாம் பேசும்போது அந்த செய்திகளை பற்றி விளக்கும் போதும் இந்த டிஜிட்டல் ஏற்றத்தாழ்வை பற்றி ஊடகவியலாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

## சைபர் கல்வி

இணையம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியுடன் இயங்கும் ஒரு தளத்தை சைபர் உலகம் என அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். இந்த சைபர் உலகத்தில் மிகவும் பாதுகாப்பாக அதன் நன்மைகள்

அனைத்தையும் பெற நம் பிள்ளைகளுக்கு அதன் அடிப்படை பற்றிய கல்வி தேவைப்படுகிறது.

சைபர் உலகம் என்பது எவ்வளவு நன்மைகளைக் கொண்டுள்ளது அவ்வளவு தீமைகளையும் கொண்டுள்ளது. இணையத்தில் தகவல் பெற நுழையும் நம் பிள்ளைகள் இணையத்தின் உதவியுடன் சமூக வலைதளங்களில் பலருடன் இணையவும், உலகம் முழுவதிலும் இருக்கும் பலர் ஒன்றாக இணைந்து வீடியோ கேம்கள் விளையாடவும் சாத்தியமாகியுள்ளது.

இன்று பிள்ளைகள் மிக எளிதாக சமூக வலைதளங்களை பயன்படுத்துகிறார்கள் ஆன்லைன் வீடியோ கேம்களை விளையாடுகிறார்கள்.

- இணையத்தில் தகவல்களைப் பெறும் போது அவர்கள் மிக எளிதாக பொய் செய்திகளுக்கு வழியாக அதிகமான வாய்ப்புகள் உள்ளது.
- இணையத்தில் அதிகமாகி இருக்கும் சைபர் கிரிமினல்களிடம் சிக்கிக் கொள்ளவும் வாய்ப்புகள் அதிகம்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கு ஏற்படும் தீய விளைவுகள் சைபர் உலகில் டிஜிட்டல் வழியில் ஏற்படும். முன்பு சாக்லேட் கொடுத்து பிள்ளையை கடத்தினால் இப்பொழுது சேட் செய்து ஏமாற்றி பிள்ளையை கடத்துகிறார்கள். குற்றத்தின் வடிவம் டிஜிட்டல் மையமாகியுள்ளது.
- சிறுவர்களை மையப்படுத்தி அவர்களை பொய்யாக ஈர்த்து வீடியோ கேம்களின் தேவையற்றவற்றை வாங்க வைக்க தங்கள் பெற்றோரின் பணத்தை செலவழிக்க வைக்கும் நிறுவனங்கள் அதிகமாகிவிட்டன. சிறுவர்கள் இப்படி வீடியோ கேம்களின் ஆசையால் செலவிடும் பணம் என்பது உலகம் முழுக்க இருக்கும் வீடியோ கேம் நிறுவனங்களின் ஒரு குறிப்பிட்ட சதவீத லாபத்தை கொடுக்கிறது.
- சமூக வலைதள பயன்பாட்டினால் அதற்கு அடிமையாக வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சமூக வலைதளம் மற்றும் வீடியோ கேம் வடிவமைப்பு என்பது பல்வேறு உளவியல் நிபுணர்களின் உதவியுடன் அதைப் பயன்படுத்துபவர்களை அடிமையாக்க கூடியதாகவே வடிவமைக்கப்படுகிறது. பெரியவர்களே இதில் சிக்கிக் கொள்ளும் போது சிறுவர்கள் மிக எளிதாக இதில் சிக்கிக் கொண்டு தங்கள் வாழ்க்கையை இழக்க வாய்ப்புகள் அதிகம்.

- சைபர் புல்லியிங் (Cyber Bullying) எனப்படும் சைபர் உலகில் புழங்கும் சிறுவர்கள் கேலிக்கு உள்ளாகி அவர்கள் உளவியல் ரீதியாக பாதிப்படையும், பல நேரங்களில் தற்கொலை வரை சென்று இருக்கிறது. சைபர் உலகில் ஒருவர் கேலி செய்யப்பட்டார் அந்த பதிவுகளை நீக்குவது மிகவும் கடினம். அதன் பரவும் வேகமும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. சாதாரணமாக கேலிக்குள்ளாகும் பிள்ளைகளின் உளவியல் சிக்கலை விட சைபரினால் கேலிக்குள்ளாகும் பிள்ளைகள் வாழ்நாள் முழுக்க அதன் உளவியல் சிக்கலில் சிக்கிக் கொள்ள வேண்டிய நிலை.

மேற்கண்ட பிரச்சனைகளுக்கான தீர்வு ஊடகவியலாளர்கள் மிக முக்கியமான பணியை செய்ய வேண்டி உள்ளது.

- பல்வேறு சைபர் கல்வி தொடர்பான விஷயங்களை மக்களுக்கு சொல்ல வேண்டியதை தம் கடமையாக கொள்ள வேண்டும்.
- சைபர் குற்றங்களை பற்றிய செய்திகளை வெளியிடும்போது அது தொடர்பான சைபர் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- சைபர் தொடர்பான குற்றங்களை வெறுமனே ஒரு குற்றமாக மட்டும் செய்திகளை குறுக்கி விடாமல் அதன் சமூக பொருளாதார சிக்கல்களையும் நம் சமூகத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்வுகளையும் ஒவ்வொரு முறையும் முன் வைப்பது மிகவும் தேவையானது.
- பல்வேறு சைபர் துறைகளைப் பற்றிய அடிப்படை அறிவை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டியது ஊடகத்தினருக்கு இருக்கும் சவால்.
- தினமும் சைபர் தொடர்பான புதுப்புது விஷயங்கள் வந்து கொண்டே இருக்கின்றன அதனால் மக்கள் இதில் மிக வேகமாக அதை பயன்படுத்த தொடங்கி விடுகிறார்கள் அதன் வேகத்திற்கு நிகராக ஊடகவியலாளர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.
- பல நேரம் சைபர் குற்றங்களின் சிக்கிக் கொள்ளும் பிள்ளைகளை குற்றம் சாட்டுவது பலரின் வேலையாக உள்ளது. சைபர் குற்றங்களின் போது முன்வைக்கப்படும் மிக முக்கியமான வாதம் "நீ ஏன் சமூக வலைதளத்தை பயன்படுத்துகிறாய் என்பதுதான்" இதில் ஊடகவியலாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் சமூக வலைதளத்திலும் தொழில்நுட்பத்திலும் ஒரு பிரச்சனையும் இல்லை அதை தவறாக பயன்படுத்துபவர்கள் தான் பிரச்சனைக்குரியவர்கள் ஆனால் தவறாக பயன்படுத்துபவர்களை குற்றம் சாட்டாமல் அதில் சிக்கிக் கொள்பவர்களை

குற்றம் சாட்டுவது மிகவும் தவறான சமூக வழக்கம். இதை தொடர்ந்து ஊடகத்தினர் மக்களிடம் அம்பலப்படுத்தவும் இதைப்பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வேண்டும்.

- சைபர் உரிமைகள், சைபர் சட்டப் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு என பல்வேறு விஷயங்களில் இன்றைய பிள்ளைகளுக்கு எந்த விதமான அடிப்படைகளும் கல்வியும் கொடுக்கப்படுவதில்லை. இந்த சிக்கலை ஊடகத்தினர் தான் இருக்கும் ஒரே தீர்வு. அவர்கள் எந்த அளவிற்கு தங்கள் ஊடகத்தின் மூலம் பல்வேறு கட்டுரைகள் நிகழ்ச்சிகள் தொடர்களின் உதவியுடன் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்களோ அந்த அளவுக்கு சைபர் பாதுகாப்பு சமூகத்தில் அதிகரிக்கும் மிகக் குறிப்பாக நம் பிள்ளைகளின் எதிர்காலம் மேன்மை அடையும்” என்றார்.

## குழந்தைகளுக்கான சட்டங்கள்
## (Laws for Children)

குழந்தைகளுக்கு வாக்குரிமை இல்லை என்றாலும் அவர்களுக்கான சில சட்டங்கள் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளன. சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாக கருதப்படும் சிறார்கள் திருட்டு, பிக் பாக்கெட், பயணச் சீட்டின்றி பயணம் செய்தல், வீதிச் சண்டை போன்ற சிறு குற்றங்களைச் செய்த குழந்தைகளையும், பயங்கரவாதம், கொலை, பாலியல் வன்முறை போன்ற பெரிய குற்றங்களில் ஈடுபட்ட குழந்தைகளையும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடும் குழந்தைகள் என்கிறோம்.

**இளம்சிறார் நீதிச் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015 (JJ Act).**

இந்த சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- குழந்தைகள் என்றால் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
- குழந்தைக்கு ஏதுவான நீதி முறை.
- குழந்தைகளைப் பாதுகாத்து குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கவனம்.
- குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து குடும்பத்துடன் அவர்களை மீண்டும் ஒன்றிணைப்பதில் அதிக கவனம்.

- குழந்தைகளின் பராமரிப்பில் பெற்றோர்களின் பங்கிற்கு முக்கியத்துவம்.
- குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் இச்சட்டத்தை அமல்படுத்துவதில் அரசின் பங்கு குறித்து மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.
- சட்டத்தினை அமுல்படுத்துவது, 2 சட்டபூர்வமான அமைப்புகளைச் சார்ந்துள்ளது. அவை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்காக குழந்தை நலக் குழு (Child Welfare Committee - CWC) மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் குழந்தைகளை நல்வழிபடுத்துவதற்காக இளஞ்சிறார் நீதிக் குழுமம் (Juvenile Justice Board - JJB).

இளம்சிறார் நீதிச் சட்டம் குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் குற்றங்களை தண்டனைக்குரியவையாக வகைப்படுத்தியுள்ளது.

பின்வரும் செயல்களை இளம் சிறார் நீதிச் சட்டம் 2015 பிரிவு 74 முதல் 85 வரை அடையாளம் காட்டுகிறது

- பாதிக்கப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட்ட குழந்தையின் அடையாளங்களை வெளியிடுவது
- கொடுமைப்படுத்துதல்
- குழந்தைகளைப் பிச்சையெடுக்க மற்றும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுத்துதல்
- குழந்தைகளுக்குப் புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கொடுத்தல் பயன்படுத்தச் செய்தல்
- போதைப் பொருட்களைக் கடத்த, விற்க, பதுக்கி வைக்க குழந்தைகளைப் பயன்படுத்துதல்
- குழந்தைகளைப் பணியில் அமர்த்துதல், அவர்கள் உழைப்பைச் சுரண்டுதல்
- முறையான சட்ட நடைமுறைகளை கையாளாமல் குழந்தைகளை தத்தெடுத்தல், தத்துக் கொடுத்தல்
- குழந்தையினை விற்றல் அல்லது வாங்குதல்
- குழந்தையினை உடல் ரீதியாக தண்டித்தல்
- குழந்தையினை சட்டவிரோத ஆயுத குழுவில் இணைத்தல், பயன்படுத்தல், குழந்தைகளைக் கடத்தல்
- மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் மீதான வன்முறை

இந்த சட்டத்தின்கீழ் எந்தக் குழந்தையும் குற்றவாளி அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் குடும்ப சூழ்நிலையே அவர்களைத் தவறு செய்யத் தூண்டுகிறது. இந்தச் சட்டத்தின்கீழ் குழந்தைகளுக்குத் தண்டனை கொடுக்கப்படாமல் அவர்களுக்கு மறு வாழ்வு அளித்து குடும்பத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதே வலியுறுத்தப்படுகிறது.

சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் குழந்தைகளை வயதிற்கேற்ப பின்வருமாறு பிரிக்கலாம்

**7 வயதுக்குட்பட்ட குழந்தைகள் (Children under 7 years of age)**

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 82 ஏழு வயது நிறையாத குழந்தையின் செயல்கள் எதுவும் குற்றச்செயல்கள் ஆகாது என்கிறது.

**7 முதல் 12 வயது (Age between 7 to 12)**

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 83 ஏழு வயது முதல் 12 வயது நிறைவடையாத குழந்தையின் செயல்கள் அந்த செயலைப் புரிந்துக் கொள்ளும் குழந்தையின் மன முதிர்ச்சியின் அடிப்படையிலேயே அது குற்றச்செயலா இல்லையா என முடிவெடுக்க வேண்டும் என்கிறது.

**12 முதல் 16 வயது (Age between 12 to 16)**

இவர்களின் மீதான வழக்கு விசாரணைகள் இளம்சிறார் நீதி குழுமத்தில் நடைபெறும்.

**17 முதல் 18 வயது (Age between 17 to 18)**

16 வயது நிறைவடைந்த குழந்தைகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஏழு ஆண்டுகளுக்கு அதிகமான தண்டனைக்குரிய தவறினைச் செய்து இருந்தால், சம்பந்தப்பட்ட குழந்தை வயதுக்கு மீறிய முதிர்ச்சி அடைந்து இருப்பதாக இளம்சிறார் நீதி குழுமம் கருதினால் வழக்கை விசாரிக்கும் குழந்தை நல காவல் அலுவலர் (Child Welfare Police Officer), கள சந்திப்பு செய்து குழந்தையின் பின்னணியை அறிந்த நன்னடத்தை அலுவலர் (Probation Officer) மற்றும் குழந்தையின் மன முதிர்ச்சியை சோதித்து அறியும் மன நல நிபுணர் (Psychologists) ஆகியோரின் அறிக்கை பெற்று, குழந்தை தனது தன்மையை இழந்து பெரியவர்களின் மன நிலையை

கொண்டு இருக்கிறார் என்ற முடிவு செய்தால் அவர்களை சிறார் நீதி மன்றத்தின் (Juvenile Court) முன் ஆஜர் படுத்தி வழக்கை விசாரிக்கலாம்.

## பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO Act, 2012)

இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை 2007ல் ஒரு ஆய்வினை மேற்கொண்டது. இந்த ஆய்வில் 17220 குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பங்கேற்றனர். குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை குறித்து அறிந்துகொள்ள செய்யப்பட்ட இந்த ஆய்வில் 53.22 சதவிகித குழந்தைகள் ஏதோ ஒரு வகையிலான பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியானது. பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 52.94 சதவிகிதம் ஆண் குழந்தைகளும் 47.06 சதவிகிதம் பெண் குழந்தைகளும் ஆவர்.

இந்த ஆய்வின் அடிப்படையில் பாலியல் தொந்தரவு மற்றும் பாலியல் சுரண்டல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க 2012-ஆம் ஆண்டில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO, 2012) "போக்சோ" என்ற சட்டத்தை ஒன்றிய அரசு இயற்றியுள்ளது.

- இச்சட்டம் இயற்றப்படும் முன்னர் இந்திய தண்டனைத் சட்டம் (IPC) 1890 பிரிவு 375ன் கீழ் உட்புகுத்தி பாலியல் வல்லுறவு (Rape) மட்டுமே பாலியல் குற்றம் என வரையறை செய்யப்பட்டு இருந்தது.
- போக்சோ சட்டத்தில் பதினெட்டு வயதுக்குக் கீழ் உள்ள எந்தவொரு நபரும் 'குழந்தை" (Child) என வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் வரும் முன்னர் இதச 90ன் படி இது 12 வயது என்றிருந்தது.
- பாலின பாகுபாடு இல்லாமல் ஆண் குழந்தை, பெண் குழந்தை என்ற பாகுபாடில்லாமல் அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாக்கும் சட்டமிது.

ஒரு முழுமையான அணுகுமுறையோடு பாலியல் வன்கொடுமையின் பல்வகை வடிவங்களை தண்டனைக்குரிய குற்றங்களாக இது பட்டியல் இடுகிறது:

- உள்புகுத்தி பாலியல் தாக்குதல் (Penetrative sexual assault)
- கடுமையான உள்புகுத்தி பாலியல் தாக்குதல் (Aggravated Penetrative Sexual Assault)

- பாலியல் தாக்குதல் (Sexual assault)
- பாலியல்தொந்தரவு (Sexual Harassment) மற்றும்
- ஆபாசப்படமாக்கலுக்கு (Child Pornography) குழந்தையைப் பயன்படுத்துதல்

இச்சட்டத்தில், சில குற்றங்கள் “கடுமையானதாக” (Aggravated) கருதப் பட்டுள்ளது. இவை, நம்பகத்தன்மையில் உள்ளோர், பொறுப்புரிமை அமைப்பில் உள்ளவர்கள் குழந்தைகள் இல்ல காப்பாளர்கள், காவல் அலுவலர், பாதுகாப்பு படையினர் மற்றும் பொது ஊழியர் போன்றோரால் இழைக்கப்படுபவை. இக்குற்றத்தில் ஈடுபடுவோர்க்கு தண்டனையும் அதிமாக்கப்பட்டுள்ளது.

மேலும்

- குழந்தையிடம் தொடர்ந்து உட்புகுத்தி பாலியல் வன்புணர்ச்சி செய்தல்
- பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு எயிட்ஸ் உள்ளிட்ட கொடிய நோயைப் பரப்புதல்
- குழந்தை கர்ப்பமுற்றிருப்பது தெரிந்து வன்புணர்ச்சி செய்தல்
- வன்புணர்ச்சி செய்து குழந்தையைக் கொல்ல முயற்சித்தல்
- குழந்தை உடல் அல்லது மனவளர்ச்சி குன்றியவராக இருப்பதை சாதகமாகப் பயன்படுத்தி வன்புணர்ச்சி செய்தல்
- ஏற்கனவே பாலியல் குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்றவராக இருத்தல்

என மேற்சொன்ன குற்றங்கள் ‘‘கடுமையானதாக” (aggravated) கருதப்பட்டுள்ளது. (போக்சோ சட்டம் பிரிவு 5)

குழந்தை மீதான பாலியல் வன்முறை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கண்டிப்பாக அதனை காவல் துறையில் புகாரளிக்க வேண்டும் (Mandatory Reporting). தவறினால் ஆறு மாத சிறை என்கிறது போக்சோ சட்டப் பிரிவு 19 மற்றும் 21.

## குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (Right to Education Act)

இந்தியா 1947இல் சுதந்திரம் அடைந்து நமது அரசியலமைப்பு சட்டம் 1950இல் நடைமுறைக்கு வந்தபோது அடுத்த 10 வருடங்களில் நமது நாட்டில் உள்ள 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி

முன்பருவ மற்றும் தொடக்கக் கல்வியை உறுதி செய்வது என Article 45 Directive Principles of State Policy-இல் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் 60 ஆண்டுகளுக்குப் பின்னும் நமது நாட்டில் பல கோடி குழந்தைகள் பள்ளிச் சூழலுக்கு உள்ளேயே வராத நிலையில் அதில் பலர் குழந்தை தொழிலாளர்களாக ஆனதை அடுத்து பல குடிமைச் சமூக அமைப்புகளின் போராட்டத்திற்குப் பிறகு 2002ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 86வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மூலம் கல்வி குழந்தைகளின் வாழும் உரிமைகளில் ஒன்றாக அடிப்படை உரிமைகள் பிரிவு 21-ல் உட்பிரிவாகச் (21A) சேர்க்கப்பட்டது.

இந்த அரசியல் சாசன உரிமையை நடைமுறைப்படுத்தும் சட்டமாக குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 (Right of Children to Free and Compulsory Education Act, 2009) கொண்டு வரப்பட்டது.

இந்தச் சட்டம்

- கல்வி குழந்தையின் சட்டப்பூர்வ உரிமை என்பதை வெளிப்படுத்தும் சட்டமாகும்.
- 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கல்வியை உறுதி செய்வது அரசின் கடமையாக இது முன் வைக்கிறது.
- குழந்தைகளின் வாழுமிடத்திற்கு அருகில் கல்வி கற்க போதிய அளவில் பள்ளிகளை உறுதி செய்தல்,
- கல்வியில் தரத்தினையும், ஆசிரியர் பயிற்சி, மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் உள்ளிட்டவற்றையும் வரையறுக்கிறது.
- இந்த வயது குழந்தைகளை கல்விச் சூழலுக்கு வெளியே வைப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்குகிறது.
- குழந்தைகளுக்கு கல்வி உரிமையை உறுதி செய்வதில் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் பெற்றோரின் கடமையினை வரையறுக்கிறது.
- எந்த ஒரு குழந்தையும் ஒரே வகுப்பில் ஓர் ஆண்டுக்கு மேல் தக்க வைக்கப்படுவதையும் இச்சட்டம் தடை செய்கிறது
- குழந்தைகளையோ அல்லது அவர்களின் பெற்றோர்களையோ நுழைவுத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வு போன்றவை வைத்து பள்ளியில் சேர்க்கை நடத்துவதைத் தடை செய்கிறது.

- தனியார் பள்ளிகள் அனைத்தும் தங்களது பள்ளியில் 25% இடங்களை இச்சட்டத்தின் கீழ் இலவச கல்வி தேவைப்படும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்த குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் எனவும் கூறுகிறது.
- பள்ளிகளை மேலாண்மை செய்ய குறைந்த பட்சம் 75 சதவிகிதம் பெற்றோர் கொண்ட அதிலும் 50% குறையாத பெண்களைக் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு உருவாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது.

இத்தனைக்குப் பிறகும் 2020 இல் வெளியான கிஷிணிஸி ஆய்வறிக்கை இந்தியா முழுவதும் 6 முதல் 10 வயதுக்குட்பட்ட 5.3 சதவிகிதம் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படவில்லை எனக் குறிப்பிடுகிறது. கல்விச் சூழலுக்குள் வராத குழந்தைகளின் உரிமைகள் மறுக்கப்படுவதுடன் அவர்கள் சமூக மேம்பாட்டில் பின் தங்கி வறுமையின் மாய வலையில் (Vicious Cycle of Poverty) சிக்கிக்கொள்ளவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

## குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006
## (Prohibition of Child Marriage act, 2006)

திருமணம் என்னும் உயர் காதல் நிலையை அடைய போதுமான உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் முதிர்ச்சியும் அனைத்து பாலருக்கும் அவசியம். குழந்தைத் திருமணம் குழந்தைகளின் உரிமைகளைப் பாதிப்பதுடன் அவர்களின் சீரான வளர்ச்சியையும் தடுத்துவிடும். மேலும் பிரசவத்தின் போது குழந்தை இறப்பு, தாய் இறப்பு போன்றவற்றுக்கு இள வயது திருமணங்களும் முக்கிய காரணமாக இருப்பதால் 1929லேயே குழந்தை திருமண கட்டுப்பாடு சட்டம் (The Child Marriage Restraint Act, 1929) கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு குழந்தை திருமணங்கள் பெருமளவு குறைந்தாலும், முற்றிலுமாக அகலவில்லை என்பதால் மீண்டும் முழு வீச்சுள்ள ஒரு சட்டமாக குழந்தை திருமண தடைச் சட்டம் 2006ம் ஆண்டு ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டது.

தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கை 4ம் சுற்று (2015-16) (NFHS 4) இன் போது தமிழ்நாட்டில் 16 சதவிகித பெண்கள் 18 வயது

நிறைவடையும் முன் திருமணம் செய்துகொண்டதை பதிவு செய்கிறது. அதில் 6 சதவிகித பெண்கள் 18 வயது நிறைவடையும் முன்னரே தாய்மை அடைந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அதே போல் தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கை 5ம் சுற்று (2019 - 21) (NFHS 5) இல் குழந்தை திருமணங்கள் 13 சதவிகிதமாக குறைந்துள்ளது. ஆனாலும் குழந்தை பெற்றுக்கொள்ளும் சதவிகிதம் 6 சதவிகிதம் என்ற நிலையே தொடருகிறது.

குழந்தை திருமணம் என்பது

- 21 வயது நிறைவடையாத ஆணுக்கோ அல்லது 18 வயது நிறைவடையாத பெண்ணுக்கோ நடைபெறுவது குழந்தை திருமணமாக கருதப்படுகிறது.
- பெற்றோர் பார்த்து வைத்தோ அல்லது காதல் திருமணம் என்று எந்த பேதமும் இன்றி மேற்சொன்ன வயது நிறைவடையாதவருக்கு இடையில் நிகழ்வது குழந்தைத் திருமணமாகும்.

குழந்தைத் திருமணத் தடை சட்டம் 2006ன் படி

- குழந்தைத் திருமணத்தை நடத்தி வைக்கும் பெற்றோர், உடன் இருப்போர், மதகுருக்கள், மைக் செட் போட்டவர், பந்தல் போடுபவர், உணவு தயாரித்து கொடுப்பவர், மண்டபம் வாடகைக்கு விட்டவர், திருமணத்திற்கு வந்த விருந்தினர் என அனைவரும் தண்டனைக்குரிய குற்றவாளிகளாவர்.
- அனைவருக்கும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியான தண்டனையை இச்சட்டம் முன் வைக்கிறது.
- இரண்டு வருட கடுங்காவல் தண்டனை, ஒரு லட்சம் அபராதம் விதிக்கிறது.
- திருமணம் முடிந்த பின்னும் திருமணத்தை செல்லாது என அறிவிக்க கோரும் வாய்ப்பை இச்சட்டம் அவர்களுக்கு அளிக்கிறது.
- 18 வயது நிறைவடையாத போது, அவர்களின் மீது அக்கறை கொண்ட ஒருவர் மூலமாகவோ அல்லது 18 வயது நிறைவடைந்த பின் இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்களே நேரடியாகவோ நடுவர் நீதிமன்றம் மூலம் திருமணத்தை செல்லாது என அறிவிக்க கேட்கலாம்.
- அவ்வாறு அறிவிக்கும் போது திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட நகை, பணம் உள்ளிட்ட அனைத்தும் திரும்ப கொடுக்கப்பட வேண்டும்.
- மறு திருமணம் செய்துக்கொள்ளும் வரை அக்குழந்தைக்கு உரிமை பணம் (ஜீவனாம்சம்) கொடுக்க சொல்லி மணமகனுக்கோ அல்லது அவரது பெற்றோர்க்கோ நீதி மன்றம் உத்தரவிடலாம்.

- ஒரு வேளை அதற்குள் குழந்தைபேற்றை அடைந்துவிட்டால் பெற்றோரின் திருமணம் செல்லாது என்றாலும் அந்த குழந்தை சட்டப்படி அந்த இருவரது குழந்தையாகவே கருதப்படும்.
- குழந்தை திருமணம் நடக்கும் முன்னரோ, அல்லது நடந்த பின்போ, மீட்கப்படும் குழந்தைகளுக்கு தேவையான பாதுகாப்பு, மறுவாழ்வு, சட்ட உதவி, மருத்துவ உதவி, தொடர் கல்வி போன்றவற்றில் உதவ குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் (District Child Marriage Prohibition Officer) நியமிக்கப்பட்டு உள்ளார்.
- தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலரே (District Social Welfare Officer) குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006-ன் படி குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் ஆவார்.

சாதி மறுப்புத் திருமணங்கள், காதல் திருமணங்கள், பெண்ணே தனக்கான துணையைத் தேர்ந்தெடுத்துவிடக்கூடாது என்ற காரணங்களாலும் வறுமை மற்றும் பெற்றோரின் வாழ்வாதார சூழல்களாலும் குழந்தைத் திருமணங்கள் இன்று தொடர்ந்து நிகழ்வதை காண முடிகிறது. மேலும் குழந்தைகள் சரியான வழிகாட்டல் இன்றி சமூக ஊடகங்கள் மற்றும் திரைப்படங்களின் தாக்கத்தால் வளரிளம் பருவத்தில் நிகழும் வழக்கமான எதிர் பாலின ஈர்ப்பை காதல் என புரிந்துகொள்வதாலும் குழந்தைத் திருமணங்கள் இன்று நமது தமிழ் பண்பாட்டு தளத்தில் அதிகரித்து வருகிறது.

# தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய வழிகாட்டுதல்கள்

## (NCPCR Guidelines)

1. குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (கீழ் இடம்பெறும் தகவல்களுள் ‘ஆணையம்’ எனக் குறிப்பிடப்படும்) என்பது குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (Commission for Protection of Child Rights) சட்டம் 2005ன் 3-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். நாட்டில் குழந்தை உரிமைகள் மற்றும் பிற தொடர்புடைய விஷயங்களைப் பாதுகாப்பதற்காக இது நிறுவப்பட்டது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO): சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 (JJ act) மற்றும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்

(RTE) ஆகியவற்றை முறையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்துவதைக் கண்காணிக்க ஆணையம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2005 பிரிவு 13-ன் கீழ் வகுக்கப்பட்ட செயல்பாடுகளில் ஒன்றாக, நாட்டில் குழந்தை உரிமைகள் பறிக்கப்படுவது மற்றும் மீறப்படுவது தொடர்பான விஷயங்களை தானாக முன்வந்து தகவல் பகிர்வதற்கும் அது குறித்த புகார்களை விசாரிப்பதற்கும் கமிஷனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

2. இந்திய அரசியலமைப்பு அதன் பிரிவுகள் 15. 21, 24, 39 மற்றும் 45-ன் கீழ் குழந்தைகளுக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கிறது. மேலும் அவர்களுக்கு பிரத்தியேக அரசியலமைப்பு உரிமைகளை அது உத்தரவாதப்படுத்துகிறது, மேலும் நாட்டில் குழந்தைகளின் நலனுக்காக இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்திற்கும் சில அடிப்படை விதிமுறைகள் உண்டு. ஆனால் வயது வந்தவர்கள் ஆதிக்கம் செலுத்தும் தொழில்துறையான ஊடகம் மற்றும் எண்டர்டெயின்மெண்ட் துறையில் குழந்தை கலைஞர்களின் பாதுகாப்பிற்காக குறிப்பிட்ட ஒழுங்குமுறை அல்லது விதிகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இதன் காரணமாக ஊடகத்தில், குறிப்பாகத் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ரியாலிட்டி ஷோக்கள், ஓடிடி இயங்குதளங்கள், சமூக வலைத்தளங்களுக்கான செய்திகள் மற்றும் உள்ளடக்க உருவாக்கம், போன்றவற்றில் உழைப்பில் ஈடுபடும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அதை மீறும் சூழலில் பங்குதாரர்கள் எதிர்கொள்ளக் கூடிய பின்விளைவுகள் குறித்துமான வழிகாட்டுதல்களை ஒரே இடத்தில் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை ஆணையம் அவதானித்தது. இதன்மூலம் தொடர்புடைய துறை அதிகாரிகளும் அந்தத் துறையில் குழந்தைகள் உரிமை தொடர்பான தங்கள் கடமைகளை அறிந்தவர்களாக இருப்பார்கள்.

3. 2011ம் ஆண்டு ஆணையம் 'பொழுதுபோக்கு துறையில் குழந்தைகளின் பங்கேற்பை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்' என்கிற தலைப்பில் கடைசியாகச் சில வழிகாட்டுதல்களை வழங்கியது. அதன்பிறகு அது தொடர்புடைய சட்டங்களில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில் சில புதிய சட்டம் மற்றும் விதிகள் இயற்றப்பட்டுள்ளன. சிறார் நீதிச் சட்டம் 2015, குழந்தைத் தொழிலாளர் திருத்தச் சட்டம் 2016, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம் 2012.

தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021 ஆகியன இவற்றுள் அடங்கும். எனவே, பிற தளங்களைக் இந்த வழிகாட்டுதல்களுக்குள் இணைக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இதனை மனதில் கொண்டு புதிய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் குழந்தைகளின் நலனை உள்ளடக்கி புதிய வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

4. இந்த வரைவு வழிகாட்டுதல்கள் ஊடக வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்வதற்கான குழுவினரோடு கலந்தாலோசித்து உருவாக்கப் பட்டுள்ளன, இதில் பொழுதுபோக்குத் துறையைச் சேர்ந்த முக்கிய நபர்கள் மற்றும் தொடர்புடைய அமைச்சகத்தின் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர். பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக வரைவு வழிகாட்டுதல்கள் இப்போது ழிசிறிசிஸி இன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

வழிகாட்டுதல்கள் முழுதையும் ncpcr.gov.in/uploads/165606353162b5862bf25fb_draft%20media%20guidelines.pdf <https://ncpcr.gov.in/uploads/165606353162b5862bf25fb_draft%20media%20guidelines.pdf> என்கிற சுட்டியில் படித்து அறிந்துகொள்ளலாம்.

# குழந்தை உரிமைகளுக்கான சட்டப்பூர்வ அமைப்புகள் (Statutory Bodies for Child Rights)

## மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (State Commission for Protection of Child Rights - SCPCR)

மாநிலத்தில் உள்ள குழந்தைகளின் உரிமைகளை அரசும் அரசுத் துறைகளும் உறுதி செய்வதையும், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தலை கண்காணிக்கவும் உருவாக்கப்பட்ட தன்னாட்சி கொண்ட அமைப்பு இது.

## மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் (State Child Protection Society - SCPS)

மாநிலத்தில் உள்ள குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகளை ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்கீட்டில் நடைபெறும் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தினை (ICPS) நிர்வாக ரீதியில் ஒருங்கிணைக்க சமூக பாதுகாப்பு துறையின் கீழ் உருவாக்கப்பட்ட அமைப்பு இது.

## குழந்தை நலக் குழு (Child Welfare Committee - CWC)

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது தேவைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் நலக் குழு செயல்படுகிறது.

- ஒவ்வொரு குழந்தை நலக் குழுவிலும் ஒரு குழுத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் உள்ளனர்.
- இக்குழுவில் ஒரு பெண் உறுப்பினர் கண்டிப்பாக இருக்க வேண்டும். மேலும் ஒருவர் குழந்தைகள் குறித்த விசயங்களில் வல்லுனராக இருக்க வேண்டும்.
- மாவட்டத்தில் உள்ள தேர்வு செய்யப்பட்ட அரசு (அ) அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் குழந்தைகள் இல்லத்தின் வளாகத்தில் குழு உறுப்பினர் அமர்வு நடைபெறுகிறது.
- குழு நடைபெறும் குறிப்பிட்ட நேரம் மற்றும் நாட்களில் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் குழு உறுப்பினர்கள் முன் முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். குழு அமர்வு நடைபெறாத நாட்களில் குழந்தைகள் நேரடியாக குழுத் தலைவர் அல்லது உறுப்பினர் வீட்டில் முன்னிருத்தப்பட்டு வரவேற்பு இல்லம் அல்லது குழந்தைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டு அடுத்த நாள் குழு அமர்வில் முன் முன்னிலைப்படுத்தப்படலாம்.
- பெற்றோர் அல்லது பாதுகாவலர் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கத் தவறும் போது அந்த இடத்தில் அரசின் கரமாக இருந்து குழந்தையின் பாதுகாப்பிற்கு இக்குழு பொறுப்பெடுத்துக் கொள்கிறது. மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்கிறது

## இளம்சிறார் நீதிக் குழுமம் (Juvenile Justice board - JJB)

ஒவ்வொரு மாவட்டத்திலும் இளம்சிறார் நீதிக் குழுமம் அமைந்திருக்கும். இக்குழு சட்டத்துடன் முரண்படும் குழந்தைகள் தொடர்புடைய அனைத்து சட்ட நடவடிக்கைகளிலும் தனித்த அதிகாரத்துடன் செயல்படும்.

- குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி அல்லது தலைமைப் பெருநகர நடுவர் நீதிமன்ற நீதிபதி தலைவராக இருப்பார். 2 சமூகப் பணியாளர்கள் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். உறுப்பினர்களில் ஒருவர் கண்டிப்பாக பெண்ணாக இருக்க வேண்டும்.

- தலைவராக நியமிக்கப்படும் நீதிபதிக்கு குழந்தை உளவியல் அல்லது குழந்தை நலன் குறித்த அறிவோ பயிற்சியோ இருக்க வேண்டும்.
- இக்குழுமத்தின் பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆகும்.
- இளஞ்சிறார் நீதிக் குழு அமர்வு நடைபெறாத நாட்களில் ஏதேனும் ஒரு குழு உறுப்பினரின் முன் குழந்தையை அழைத்துச் செல்லலாம்.
- நன்னடத்தை அலுவலர் சமர்ப்பிக்கும் அறிக்கை, குழந்தையின் பின்னணி மற்றும் குடும்பத்தின் சூழ்நிலையை அறிய ஒரு முக்கியமான ஆவணமாக உள்ளது. நன்னடத்தை அலுவலரின் அறிக்கை, நடந்த தவறு மற்றும் குழந்தையுடன் பேசும் போது கிடைத்த தகவல் ஆகியவற்றை மனதில் கொண்டு குழந்தையை பெற்றோருடன் சேர்த்து வைப்பதா அல்லது மறுவாழ்விற்காக சிறப்பு இல்லத்தில் வைப்பதா என்று இளம்சிறார் நீதிக் குழுமம் முடிவு செய்கின்றது.

## மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit - DCPU)

ஒவ்வொரு மாவட்டத்திலும் குழந்தை நலக்குழு, சிறார் நீதிக் குழுமம் உள்ளிட்ட குழந்தை பாதுகாப்புக்கான அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் Childline 1098, குழந்தைகள் இல்லங்களை, தத்தெடுப்பு மையங்களை கண்காணித்தல் போன்ற பணிகளையும், கிராமம் தோறும் கிராம குழந்தை பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி வழிநடத்துவது போன்ற செயல்பாடுகளையும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு முன்னெடுக்கிறது.

மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் இயங்கும் இந்த அலகிற்கு மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் தலைமை ஏற்று செயல்படுகிறார். இந்த அலகில் குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள், ஆற்றுப்படுத்துனர்கள், சட்ட மற்றும் நன்னடத்தை அலுவலர், சமூகப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் எனப் பலர் உள்ளனர்.

## கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு (VLCPC)

கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு (VLCPC), கிராமங்களில் உள்ள அல்லது சமூகத்தில் உள்ள குழந்தைப் பாதுகாப்பு சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக நிறுவப்பட்ட உள்ளூர் அளவிலான குழு. குழந்தைகளுக்கு எதிரான துஷ்பிரயோகம், சுரண்டல்,

புறக்கணிப்பு மற்றும் இன்ன பிற செயல்களைக் கண்டறிந்து அதற்குத் தீர்வு காண்பதில் இந்தக் குழுக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த குழுவில் கிராம பஞ்சாயத்து நிர்வாகங்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், உள்ளூர்த் தலைவர்கள், இளைஞர் அமைப்புகள், உள்ளூர் அரசு அதிகாரிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் பணிபுரியும் அரசு சாரா அமைப்புகள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள்.

## வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு (WLCPC)

கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் போலவே வார்டு அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு என்பது ஒரு நகரம் அல்லது நகர்ப்புறத்தில் வார்டுகள் அளவில் நிறுவப்படும் ஒரு குழு ஆகும். அந்தந்த வார்டுகளில் உள்ள குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்வதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

## சைல்டு லைன் 1098 (Childline 1098)

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றிய அரசின் குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகத்தின் மூலம் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அவசர உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவ சைல்டு லைன் 1098 செயல்பட்டு வருகிறது. ஆபத்தில் இருக்கும் குழந்தைகள் 24 மணிநேரமும் இந்த சேவையைப் பெறலாம்.

## மாணவர்களுக்கான கல்வித்துறை உதவி எண் 14417

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாணவர்களுக்கான உதவி எண் 14417 அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளிக் கல்வித்துறை சார்ந்த திட்டம் தொடர்பான சந்தேகங்கள், தகவல்கள். மனநல ஆலோசனை உள்ளிட்ட உதவிகளை இந்த எண்ணிற்கு தொடர்புகொள்வதன் மூலம் பெறலாம்.

## மகளிர் உதவி மையம் 181

தமிழ்நாடு அரசின் 181 மகளிர் உதவி மையம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் ரகசிய சேவை மையம் ஆகும். 181 என்கிற எண்ணுக்கு அழைப்பதன் மூலம் குடும்பப் பிரச்சினை உள்ளிட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு

காவல்துறை, மருத்துவத் துறை, சட்ட உதவி, மனநல ஆலோசனை போன்ற அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

## இளம்சிறார் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டம் 2015ன் பிரிவு 107

1. ஒவ்வொரு காவல் நிலையத்திலும், துணை உதவி ஆய்வாளர் பதவிக்கு குறையாத, குழந்தைகளுடன் பணியாற்றும் ஆர்வம், பயிற்சி மற்றும் ஆற்றுப்படுத்தல் திறமை உள்ள ஒருவரை பாதிக்கப்பட்ட அல்லது தவறிழைத்த குழந்தைகளுக்காக அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றிட குழந்தை நல காவல் அலுவலராக நியமிக்க வேண்டும்.
2. குழந்தைகளுக்கான காவல் துறை சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்க, குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாநகரங்களில் மாநில அரசு உருவாக்கவேண்டும் அந்த பிரிவுக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அளவுக்கு குறையாத அலுவலர் தலைமையேற்க வேண்டும். அந்த எல்லைக்குடப்பட்ட உட்பிரிவு 1–ன் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒரு பெண் உட்பட குழந்தைகளுடன் பணியாற்றிய அனுபவமுள்ள இரண்டு சமூகப்பணியாளர்கள் இதில் இருப்பார்கள்.
3. குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவுக்கு நியமிக்கப்படும் அனைத்து அலுவலர்களுக்கும் அவர்கள் தங்கள் பணியை சிறப்பாக செயல்படுத்த தேவையான அனைத்து பயிற்சிகளும் அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டவுடன் கொடுக்கப்பட வேண்டும்.
4. குழந்தைகள் சிறப்பு காவல் பிரிவு குழந்தைகளுடன் பணியாற்றும் தொடர்வண்டி காவல் படையையும் (Railway Police) உள்ளடக்கியதாகும்.

மேலும்

- குழந்தைத் திருமணத்தை தடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழந்தை திருமண தடுப்பு அலுவலர்,
- குழந்தைகள் பணியில் இருப்பதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க தொழிலாளர் நலத்துறை அலுவலர்,
- பாதிக்கப்பட்ட அல்லது தவறிழைக்கும் குழந்தைகளின் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் நிலை மற்றும் மறுவாழ்வு பற்றி அங்கேயே ஆலோசனை தரும் நன்னடத்தை அலுவலர்கள், கவுன்சிலர்கள், வழக்கறிஞர்கள் ஆகிய அம்சங்களும் சட்டப்படி உள்ளன.

# குழந்தைகளுக்கான அரசு நலத்திட்டங்கள்

## (Government Welfare Schemes for Children)

தமிழ்நாடு அரசால் 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய நலத்திட்டங்கள் சில...

### கல்வித் தொலைக்காட்சி

கொரோனா பெருந்தொற்று காலம் தொடங்கி பள்ளி செல்ல இயலாத மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே கல்வி பயிலுவதற்கு ஏதுவாக 1 முதல் 12 வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும் உரிய அனைத்து பாடங்களும் தமிழ்நாடு அரசின் 'கல்வி தொலைக்காட்சி' மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

### கவிமணி விருது

குழந்தைகளின் எழுத்து ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் 18 வயதுக்கு உட்பட்ட இளம் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் கவிமணி விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 9-12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்.

### 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீடு

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி முறையாகச் சென்று சேர்ந்திட 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீட்டில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் அரசே ஏற்று நடத்துகிறது. பொறியியல், வேளாண்மை, கால்நடை, மருத்துவம், மீன்வளம், சட்டம் ஆகிய தொழிற்கல்விப் படிப்புகள் இந்த உள் ஒதுக்கீட்டில் அடங்கும்.

### இல்லம் தேடிக் கல்வி

கொரோனா தொற்றால் 1 முதல் 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கற்றலில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய தன்னார்வலர்கள் உறுதுணையுடன் மாணவர்களின் அன்றாடக் கற்றல் செயல்பாடுகளை எளிதாக்க இல்லம் தேடிக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 30 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

## நான் முதல்வன் திட்டம்

ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்கள் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி நாட்டு வழுங்க 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கப்பட்டது.

## எண்ணும் எழுத்தும் திட்டம்

பள்ளிகள் மூடப்பட்டிருந்ததால் குழந்தைகளிடம் ஏற்பட்டிருந்த கற்றல் இடைவெளியை ஈடுகட்ட எண்ணும் எழுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2025க்குள் அனைத்து குழந்தைகளும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவைப் பெறவேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும் எட்டு வயதிற்குள் பொருள் புரிந்து படிக்கும் திறனையும் அடிப்படைக் கணிதச்செயல்பாடுகளைச் செய்யும் திறன்களையும் பெற்றிருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.


## மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

எளிய குடும்பப் பின்னணியைக் கொண்ட பெண் பிள்ளைகளின் உயர்கல்வியை உறுதிசெய்ய மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயின்ற மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதந்தோறும் 1000 ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும்.

# குழந்தை உரிமைகளும் ஊடக நெறியும்
## (Child Rights and Media Ethics)

ஊடகவியலாளர்களின் பன்னாட்டு கூட்டமைப்பு (International Federation of Journalists) 2001ல் சியோலில் நடைபெற்ற அதன் மாநாட்டில் குழந்தை உரிமைக்கான ஊடகவியலாளர்களின் நெறிகளைத் தீர்மானமாக ஏற்றுக்கொண்டது (International Federation of Journalists Guidelines and Principles for Reporting on Issues Involving Children).

- அனைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக வல்லுநர்கள் மிக உயர்ந்த நெறிமுறை மற்றும் தொழில்முறைத் தரங்களைப் பேணுவதற்கு கடமைப்பட்டுள்ளனர். குழந்தைகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை மற்றும் அது சார்ந்த செயல்பாடுகள் மற்றும் அவை உருவாக்கிய தாக்கங்கள் பற்றிய தகவல்களை பரந்த அளவில் பரப்புவதை ஊடகங்கள் ஊக்குவிக்க வேண்டும்.
- ஊடக நிறுவனங்கள் குழந்தைகளின் உரிமைகள் மீறல் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, அந்தரங்கம் மற்றும் தனியுரிமை, பாதுகாப்பு, அவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் மற்றும் அனைத்து வகையான சுரண்டல் தொடர்பான பிரச்சினைகளையும் விசாரணை மற்றும் பொது விவாதத்திற்கான முக்கியமான கேள்விகளாகக் கருத வேண்டும். தங்கள் அந்தரங்கம் காக்கப்பட முழு உரிமை குழந்தைகளுக்கு உண்டு,
- குழந்தைகளின் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும் தன்மையினைப் புரிந்துக்கொண்டு அவர்களின் வாழ்க்கை மற்றும் நலனைப் பேணும் ஊடக செயல்பாட்டினைத் தொடர வேண்டும்.



புத்தகங்களில் குழந்தையின் புகைப்படத்தை மறைப்பது

- பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்கள் குழந்தைகளின் விவகாரங்களை செய்தியாக்குவதில் தரமான ஆக்கப்பூர்வமான நெறிமுறைகளை உருவாக்கி அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். குறிப்பாக குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி செய்தியாக்கும் போது துல்லியம் மற்றும் பொறுப்புணர்வின் அடிப்படையில் சிறந்த தரத்தை எட்டப் பாடுபடுங்கள்.
- குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் தகவல்களைக் கொண்ட தரவுகள் செய்திகள் குழந்தைகள் பயன்படுத்தும் ஊடக வெளியில் ஊடுருவுவதைத் தவிர்த்திடுங்கள்.
- குழந்தைகள் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு கிளர்ச்சியூட்டும் வகையில் புனைவுகள் மற்றும் பரபரப்பான விளக்கக்காட்சிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திடுங்கள்.
- குழந்தைகள் தொடர்பான எந்தவொரு தகவலையும் வெளியிடுவதால் ஏற்படும் விளைவுகளை கவனமாகப் பரிசீலித்து குழந்தைகளுக்கு ஏற்படும் தீங்கை குறைக்க வேண்டும்.

- குழந்தைகளின் படங்களையோ மற்ற பிற அடையாளங்களையோ உண்மையிலேயே அது குழந்தையின் சிறந்த நலனுக்கு உதவும் என்ற சூழலில் தவிர மற்ற வேளைகளில் முழுமையாக தவிர்த்திடுங்கள்.
- தங்கள் சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்த எந்தவொரு தூண்டுதலுமின்றி ஊடகங்களை அணுகும் உரிமையை குழந்தைகளுக்கு வழங்குங்கள்.
- குழந்தைகள் வழங்கிய தகவல்களின் உண்மைத் தன்மையினை சரிபார்ப்பை உறுதி செய்தல் மற்றும் தகவல் கொடுக்கும் குழந்தைகள் ஆபத்தில் சிக்காமல் அதே வேளையில் சரிபார்ப்பு நடைபெறுவதை உறுதி செய்ய சிறப்பு கவனம் செலுத்துதல் வேண்டும்.
- குழந்தைகளை கிளர்ச்சியூட்டும் வகையில் காட்டும் ஒளிக்காட்சிகளைத் தவிர்த்திடுங்கள்




பள்ளிக்கூடம் பெயர் தெரிந்தால் மறைப்பது



Index No - H.S Code - Voc -
Name :-
Father's Name :-
D.OB :- 12/01/2002
Class :- X
Sec :-
Roll :-
Mobile :-
Signanature of Headmaster



ஐ.டி. கார்டை மறைப்பது

- குழந்தைகளின் ஒளிப்படங்கள், தரவுகள் மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு நியாயமான, திறந்த மற்றும் நேரடியான முறைகளைப் பயன்படுத்தவும். முடிந்தால், குழந்தைகள் அல்லது பொறுப்புள்ள பெரியவர், பாதுகாவலர் அல்லது பராமரிப்பாளரின் ஒப்புதலுடன் அவற்றைப் பெறவும்
- குழந்தைகளின் நலன்களுக்காகப் பேசும் அல்லது பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் எந்தவொரு அமைப்பின் பின்னணி மற்றும் உண்மைத் தன்மையை மற்றும் நம்பகத் தன்மையை சரிபார்க்கவும்;
- குழந்தைகளின் நலன் சம்பந்தப்பட்ட விசயங்களுக்காக குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களுக்கு குழந்தைகளின் தகவல்களைப் பெற பணம் செலுத்தக்கூடாது.

ஐ.நா.சபையின், குழந்தை உரிமை உடன்படிக்கையை அந்தந்த நாடுகளில் செயல்படுத்துவது தொடர்பாக ஐ.நா.விற்கு அரசால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை விமர்சன ரீதியாக ஆய்வு செய்ய வேண்டும். அந்த அறிக்கையில் முன் வைக்கப்பட்ட உரிமை மேம்பாட்டு செயல்பாடுகளை ஆவணப்படுத்த வேண்டும். மிக முக்கியமாக, ஊடகங்கள் குழந்தைகளின் நிலைமைகளை நிகழ்வுகளாக மட்டுமே கருதி அறிக்கையிடக்கூடாது, ஆனால் இந்த நிகழ்வுகளுக்கு வழிவகுக்க கூடிய காரண காரியங்களைக் குறித்து தொடர்ந்து விவாதிக்க, அவற்றைப் பேசு பொருளாக்க வேண்டும்.

குறிப்பாக


- குழந்தைகளின் அந்தரங்கம் மற்றும் அவர்களின் தனிமை பாதுகாக்கப்படும் உரிமையினை மதிக்க வேண்டும்.
- குழந்தைகள் அவர்களின் குரல்களைப் பதிவு செய்ய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள ஊடகங்கள் வாய்ப்பளிக்க வேண்டும்
- ஒரு தகவலை வெளியிடும் முன் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் அதன் உண்மை மற்றும் நம்பகத்தன்மையினை உறுதி செய்த பின்னரே வெளியிட வேண்டும்
- அந்த செய்தியை வெளியிடுவதால் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் குழந்தைகள் மீது தாக்கத்தின் வீச்சு அதிகமாகிவிடாமல் பாதுகாத்தல் – நோக்கமாக இருக்க வேண்டும்.



லாங் ஷாட்டில் குழந்தைகளைக் காட்டுவது

மேலும் பின்வருவனவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிறது. அவை:

- விரசமான செய்திகள், வன்முறை மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மட்டும் முன்னிறுத்திய செய்திகள் என குழந்தைகளின் சிந்தனையை பாதிக்க கூடிய காட்சிகள் மற்றும் ஒளிப்படங்கள்
- சமூக நிகழ்வுகளை, செய்திகளை அதிக புனைவுகள் மற்றும் விரசமேற்றி வழங்குதல்




குழந்தைகளைப் பேட்டி எடுத்தால் அவர்கள் முகத்தை மறைப்பது




**குழந்தைகள் பெயரைக் கேட்பதைத் தவிர்ப்பது**


ஐரோப்பிய நலவாழ்வு செய்தி கூட்டமைப்பு (European Health Communications Network) தொழில்முறை நலவாழ்வு செய்தி ஆசிரியர்களுக்கு என வெளியிட்ட நெறிமுறைகள் (Guidelines for Professional Health Correspondents)

1. முதலில் எந்த பாதிப்பிற்கும் இடம் கொடுக்க கூடாது. மனித உரிமைகளும் மக்களின் நல மே முக்கியம்.
2. சரியானதை மட்டும் வெளியிடுங்கள். உங்களது அலுவலக காலக்கெடு (deadlines) செய்தியின் உண்மை தன்மையை நீங்கள் சோதிப்பதற்கு தடையாக இருக்க கூடாது.





**பிற அடையாளங்கள், அவர்களது பெர்சனலான கேள்விகளைக் கேட்பதை தவிர்ப்பது**

3. தவறான நம்பிக்கைகளை உருவாக்காதீர்கள். ‘அதிசய சிகிச்சைகள்’ அல்லது ‘பயமுறுத்தும் பெருந்தொற்று’ போன்ற தரவுகளின் அடிப்படையில் செய்தியாக்கும் போது கூடுதல் கவனமாக இருங்கள்.
4. தனிப்பட்ட நபர்களின் நலன்களை முதன்மை படுத்தும் செய்திகளில் கவனமாக இருங்கள். ‘இந்தக் செய்தியால் யாருக்கு அதிக லாபம்?’ என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.




அவர்களைத் தொடாமல் பேசுவது

5. தனிப்பட்ட தூண்டுதல்களை நிராகரிக்கவும். பெறப்பட்ட உதவித்தொகையின் விளைவாக ஒரு கட்டுரை அல்லது செய்தி வெளியிடப்படுகிறது எனில் அதனை எப்போதும் தெளிவுபடுத்தவும்.
6. உங்கள் மீது நம்பிக்கை கொண்டு கொடுக்கப்பட்ட தகவல்களின் ஆதாரத்தை ஒருபோதும் வெளியிட வேண்டாம்.
7. எல்லா நேரங்களிலும் நோயாளிகள், மாற்று திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் அந்தரங்கத் தனியுரிமையை மதிக்கவும்




**குழந்தைகளை கிளர்ச்சியூட்டும் வகையில் காட்டும்
ஒளிக்காட்சிகளைத் தவிர்த்திடுங்கள்**

8. உங்கள் செய்தியின் / கட்டுரையின் விளைவுகளை குறித்து எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள். நோயாளிகள் அல்லது ஊனமுற்ற நபர்கள் – குறிப்பாக குழந்தைகள் – ஊடகங்கள் அவர்கள் மீதான செய்தி ஆர்வத்தை இழந்த பிறகும் நீண்ட காலம் வாழ வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.




9. தனிப்பட்ட துயரத்தில் ஒருபோதும் தலையிடாதீர்கள். குறிப்பாக பேரிடர்களைக் கையாளும் போது, பிரிந்தவர்களின், பாதிக்கப் பட்டவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினரின் உணர்வுகளை வெகு அருகில் காட்சிப்படுத்துவது போன்றவை முடிந்தவரை தவிர்க்கப்பட வேண்டும்.

10. செய்தியில் / தரவுகளில் சந்தேகம் இருந்தால் விட்டுவிடுங்கள்.

# செய்தி வெளியீட்டில் செய்ய வேண்டியவையும் செய்ய கூடாதவையும்
## (Do's and Dont's while reporting)

குழந்தைகளின் உரிமைகளை ஊடகங்கள் வாயிலாக உரக்கச் சொல்ல முடியும்.

**செய்ய வேண்டியவை**

- குழந்தை உரிமைகள் சார்ந்த செய்திகளை உரிமைப் பார்வையில் எழுதுதல் வேண்டும்.
- விவாதங்களை ஊக்குவித்தல் வேண்டும்.
- தரவுகளை திரட்டி பரவலாக்கல் வேண்டும்.
- மறுக்கப்படும் உரிமைகளை அடையாளம் காட்டுதல் வேண்டும்.
- குழந்தைகளின் உரிமைகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்களின் குரல்களை வெளிக்கொண்டு வருதல் வேண்டும்.
- ஒரு குறுப்பிட்ட பாதிப்பு குறித்த செய்தி வெளியிடும் போது அதற்கு தீர்வு எங்கே கிடைக்கும் அல்லது மாற்று வாய்ப்புகள் என்ன இருக்கிறது என்பதையும் பதிவு செய்தல் வேண்டும்.
- குழந்தைகள், குழந்தை உரிமைகளுக்கான அமைப்புகள் மற்றும் செயல்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பை பதிவு செய்தல் வேண்டும்.
- அரசு, அரசு துறைகள், குழந்தை உரிமை அமைப்புகள், குழந்தைகளின் உரிமைக்கான சட்டப்பூர்வ அமைப்புகள் தங்கள் பணிகளில் தவறும் போது உரிய தரவுகளுடன் சுட்டிக்காட்டல், வலியுறுத்தல் வேண்டும்.

**செய்யக் கூடாதவை**

- பாதிக்கப்பட்ட குழந்தைகளின், வளரிளம் பருவத்தினரின் பெயர், ஒளிப்படம் உள்ளிட்ட அடையாளங்களை வெளியிடுதல் கூடாது.
- ஏன் நடந்தது என்ற காரணத்தை ஆராயாமல் என்ன நடந்தது என்ற அடிப்படையில் மட்டும் முடிவுக்கு வருவது கூடாது.
- பிழைத்தவர்களின் (Survivor) / காப்பாற்றப்பட்டவர்களின் சூழலை கேலிக்குள்ளாக்குவது கூடாது.

- வழக்கின் தொடர் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் பிழைத்தவர்களின் / காப்பாற்றப்பட்டவர்களின் வாழ்க்கையினை முன்னிலைப்படுத்தல் கூடாது.
- பிழைத்தவர்கள் / காப்பாற்றப்பட்டவர்களிடம் துருவி துருவி கேள்விகள் கேட்பது கூடாது.

## சில உதாரணங்கள்

### நிர்பயா - பெயர் மற்றும் அடையாளம் அற்ற போராளி

2012-ம் ஆண்டின் இறுதியில் கொடூரமான பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டு மருத்துவ தலையீடுகள் தோல்வி அடைந்து மரணமடைந்த அந்த செய்தி இன்னமும் "நிர்பயா" என்ற வார்த்தையை கேட்டவுடன் அதன் தொடர் சம்பவங்கள் நம் கண்முன்னே நிழலாடும். ஆனால் இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் உண்மையான பெயர், ஒளிப்படம் போன்றவை சமூக வலைதளங்களில் ஓரிரு இடங்களில் வெளி வந்தாலும் அதை யாரும் பரப்பத் துணியவில்லை. நிர்பயா என்ற பெயருடன் இன்னமும் அவளின் தாக்கம் இச்சமூகத்தில் இருந்துகொண்டே இருக்கிறது.

### ஜம்மு காஷ்மீர் - கத்துவா கூட்டு பாலியல் வல்லுறவு சோகம்

2018-ம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலம், கத்துவாவில் நிகழ்ந்த கூட்டு பாலியல் வல்லுறவுக்கு பலியான எட்டு வயது குழந்தையின் ஒளிப்படங்கள் மற்றும் அது குறித்து பொறுப்பற்ற வகையில் செய்தி வெளியிட்ட 12 ஊடக நிறுவனங்களுக்கு போச்சோ சட்டம் விதி 23-ன் கீழ் பத்து லட்சம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் தனது கண்டனத்தையும் பதிவு செய்தது உச்சநீதிமன்றம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### அரியலூர் மாவட்ட 17 வயது பள்ளி குழந்தையின் தற்கொலை

தஞ்சாவூர் மாவட்டம், மைக்கேல்பட்டியில் இயங்கி வந்த மேனிலைப் பள்ளியில் படித்து வந்த அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த +2 மாணவி 2022 சனவரியில் பள்ளி விடுதியில் பூச்சி மருந்து குடித்து, பின்னர் மருத்துவ மனையில் இறந்த இம்மாணவியின் மரணத்தின் போது வெளி வந்த உண்மைச் செய்திகளை விட சமூக ஊடகங்களில் வெளியான வதந்திகளே

அதிகம். மாணவி மரணபடுக்கையில் இருந்தபோது குழப்பங்களை தவிர்த்து தற்கொலைக்கான சம்பவங்களை ஆராய்ந்து இருந்தால் மாணவி காப்பாற்றப்பட்டு இருக்கவும் வாய்ப்பு இருந்தது என்பதை நினைவில் கொள்வோம்.

# குழந்தை உரிமை குறித்த ஊடகவியலாளர்களுக்கான ஃபெல்லோஷிப் மற்றும் ஆன்லைன் படிப்புகள்

**(Online Courses and Fellowships for Journalists on Child Rights)**

குழந்தை உரிமைகள் மற்றும் அவர்கள் தொடர்பான செய்திகளை ரிப்போர்ட் செய்ய விரும்பும் ஊடகவியலாளர்களுக்கு என ஆன்லைன் படிப்புகள் மற்றும் ஃபெல்லோஷிப் போன்ற அம்சங்கள் நிறையவே உள்ளன.

## 1. UNICEF's Voices of Youth Digital Diaries

யுனிசெஃப் வழங்கும் இந்த ஆன்லைன் படிப்பு இளைய ஊடகவியலாளர்களுக்கான டிஜிட்டல் கதை சொல்லல் மற்றும் பிளாக்கிங் தொடர்பான பயிற்சிகளை அளிக்கிறது. இது இளைஞர்கள் குறிப்பாக குழந்தை உரிமைகளை மையமாகக் கொண்டு வழங்கப்படுகிறது.

## 2. Dart Center for Journalism and Trauma

டார்ட் மையம் மனநலன் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான தகவல்களைக் கையாளுவதற்கான பல்வேறு ஆன்லைன் வகுப்புகள், வெபினார் மற்றும் ஃபெல்லோஷிப் ஆகியவற்றை ஊடகவியலாளர்களுக்கு வழங்கி வருகிறது. இவை குழந்தைகள் தொடர்பான நிகழ்வுகளை மையமாக கொண்டு நடத்தப்படுகின்றன.

## 3. International Children's Media Center

சர்வதேச குழந்தைகள் ஊடக மையம் ஊடகங்களின் குழந்தைகள் குறித்து வெளியாகும் செய்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு படிப்புகளை வழங்கி வருகின்றது. இதில் குழந்தை உரிமைகள், ஊடக அறம் மற்றும் குழந்தை வளர்ச்சி தொடர்பான படிப்புகள் வழங்கப்படுகின்றன.

## 4. Reuters Institute for the Study of Journalism

தி ராய்ட்டர்ஸ் நிறுவனத்தின் கல்விப்பிரிவு பல்வேறு ஃபெல்லோஷிப் மற்றும் பயிற்சி திட்டங்களை ஊடகவியலாளர்களுக்காக வழங்கி வருகின்றது குறிப்பாக இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் குறித்து பதிவு செய்யும் ஊடகவியலாளர்களுக்காக தனித்துவமான தலைப்புகளில் பாடங்களை ராய்ட்டர்ஸ் நிறுவனம் வழங்கி வருகிறது. இந்த ஃபெல்லோஷிப் குழந்தை உரிமைகள் குறித்த விவகாரங்களில் ஆய்வு செய்து ரிப்போர்ட் செய்ய ஊடகவியலாளர்களுக்குச் சரியான பாதையைத் தருகிறது.

## 5. Knight - Wallace Fellowship

மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் தி க்நைட் வாலஸ் ஃபெல்லோஷிப் ஊடகத்துறையில் அனுபவம் மிக்க ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்படுகிறது. இதில் ஒரு கல்வியாண்டுக்கான ஆய்வு மற்றும் கல்வி அடங்கும். இது குழந்தை உரிமைகளுக்கு என தனித்து வழங்கப்படும் ஃபெல்லோஷிப் இல்லை என்றாலும், பல்வேறுபட்ட பிரிவுகளில் ஆய்வுப்படிப்பு மேற்கொள்ள இது வாய்ப்பினை வழங்குவதால் குழந்தைகள் உரிமை குறித்த ஆய்வுகளையும் இதன் கீழ் மேற்கொள்ளலாம்.

இந்த படிப்புகள் அத்தனையுமே அதற்கான குறிப்பிட்ட டைம்லைனுக்கு உட்பட்டது என்பதால் தொடர்புடைய வலைதளத்துக்குச் சென்று அவை குறித்த மேலதிக மற்றும் அண்மைய தகவல்களைத் தெரிந்துகொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது.

# அறிந்து அளித்த ஒப்புதல்
## (Consent Form)

அறிந்து அளித்த ஒப்புதல் என்பதன் பொருள்: அபாயங்கள் அல்லாது பிற இடர்பாடுகளுக்கான வாய்ப்புகள் பற்றிய அனைத்து உண்மைகளும் வெளியிடப்பட்ட நிலையில், முழு அறிவுடன் ஒரு செயலை செய்வதற்கான ஒப்பந்தம் அல்லது அந்தச் செயல் நடைபெற அனுமதித்தல்.

நன்கறிந்து அளித்த ஒப்புதல் வேண்டுவதற்கான மாதிரிப் படிவங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. ஒன்று அச்சு ஊடகத்திற்கானது. மற்றொன்று ஒலி ஒளிபரப்பிற்கானது பேட்டி காணும் குழந்தையும், அதன் பராமரிப்பாளரும் எதற்கான பேட்டி எடுக்கப்படுகிறது? இதன் மூலம் என்ன விளைவுகள் ஏற்படலாம்?, என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளனரா என்பதை உறுதி செய்ய ஊடகத் துறையினர் இந்த படிவங்களைப் பயன்படுத்தலாம்.

# இணைப்பு - 1
## Annexure-1

### அச்சு ஊடகத்திற்கான அறிந்து அளித்த ஒப்புதல் படிவம்
### (Consent form for Press Media)

(இந்தப் படிவம் ஒரு குழந்தைக்கு அதன் பராமரிப்பாளர் அளிப்பதற்கான ஒப்புதலுக்கானது. இந்த படிவத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும். இதன் நகல் ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். செய்தி ஒன்றில் இடம் பெற உள்ள குழந்தைக்காக மட்டுமே இந்த படிவம் பயன்படுத்தப்பட வேண்டும்)

செய்திக் கட்டுரையின் தலைப்பு :

என் பெயர் :

நான் பணிபுரியும் இடம் :

நான் எழுதும் செய்தியின் கருப்பொருள் :

கட்டுரை வெளியாக உள்ள செய்தித்தாள் :

நான் வசிக்கும் இடம் :

அச்சு ஊடகம் ஒன்றுக்காக நான் ஒரு கட்டுரை எழுத விரும்புகிறேன். அதில் தங்கள் குழந்தையின் கருத்துகளும் தங்கள் குழந்தை பற்றிய செய்தியும் அடங்கியிருக்கும்.இது தொடர்பாக உங்களையும் நான் பேட்டி காண விரும்புகிறேன். செய்தியில் உங்களுடைய கருத்துகளும் இடம்பெறும். இந்த கட்டுரை அச்சு ஊடகம் ஒன்றில் பிரசுரமாகும். இந்தக் கட்டுரையை பொதுமக்கள் பலரும் படிப்பார்கள்.அவர்களில் சிலர் உங்களுக்குத் தெரிந்தவர்களாகவும் உங்கள் குழந்தை அறிந்தவராகவும் இருக்கலாம். செய்தியில் உங்கள் பெயரோ அல்லது உங்கள் குழந்தையின் பெயரோ வெளியாவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் நான் உங்களுடைய பெயர்களை வெளியிட மாட்டேன். செய்தி வருவதற்கு முன் அதனை

உங்களிடம் காட்டுவதற்கு தேவையான நியாயமான முயற்சிகளை எடுப்பேன் எனஉறுதிகூறுகிறேன். எனினும்எனக்குகாலக்கெடுஎதுவும்நிர்ணயிக்கப்படும் நிலையில் இது கண்டிப்பாகச் சாத்தியம் எனக் கூற முடியாது.செய்தியில் நீங்கள் பிரசுரிக்க விரும்பாத உங்களைப் பற்றிய அம்சம் எதுவும் இருந்தால் அதனை நீக்கி விடுவேன். விரும்பினால் நீங்களும் பேட்டியில் பங்கேற்கலாம். உங்களுடைய குழந்தை பற்றிய கட்டுரையை செய்தித்தாளில் வெளியிடவும் நீங்கள் அனுமதிக்கலாம். ஆதரவு திட்டம் ஒன்றின் அங்கமாக உங்கள் குழந்தை இருக்கும் நிலையில் குழந்தை பற்றிய நிகழ்ச்சி வெளிவரக்கூடாது என நீங்கள் நினைத்தால் அந்த திட்டத்தில் உங்கள் குழந்தையின் பங்கேற்பு குறித்து எதுவும் கூறப்பட மாட்டாது. செய்தித்தாளில் உங்கள் குழந்தை பற்றிய கட்டுரை ஒன்று எழுதுவதிலும், உங்களை பேட்டி காண்பதிலும் உங்களுக்கு முழு உடன்பாடு உண்டு என்பதை உறுதி செய்வதற்காகத்தான் இந்த படிவத்தில் கையொப்பமிடுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். பேட்டியின் எந்த ஒரு இடத்திலும் நீங்கள் உங்கள் குழந்தையை விலகி விடுமாறு செய்யலாம். குழந்தையை பற்றிய செய்தி பத்திரிகையில் வெளிவர அனுமதிப்பது என்பது உங்கள் விருப்பத்தை சார்ந்தது என்பதை நினைவில் கொள்ளவும். இந்த படிவம் அல்லது பத்திரிகை செய்தி குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் ________________________________
என்கிற எண்ணில் என்னைத் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

## செய்திக்கட்டுரைக்காக குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வழங்கும் ஒப்புதல் வாக்குமூலம்

செய்தித்தாளில் என்னுடையை குழந்தையை பற்றிய செய்தி வெளியிடுவதற்கு நான் சம்மதிக்கிறேன். இதற்கு பேட்டி காணவும் நான் சம்மதம் தருகிறேன்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் :

தேதி:

# இணைப்பு - 2

## Annexure - 2

### ஒலி / ஒளிபரப்பு ஊடகத்திற்கான அறிந்து அளித்த ஒப்புதல் படிவம்

### (Consent form for Visual/Audio Media)

(இந்தப் படிவம் ஒரு குழந்தைக்கு அதன் பராமரிப்பாளர் அளிப்பதற்கான ஒப்புதலுக்கானது. இந்த படிவத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும். இதன் நகல் ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். செய்தி ஒன்றில் இடம் பெற உள்ள குழந்தைக்காக மட்டுமே இந்த படிவம் பயன்படுத்தப்பட வேண்டும்)

ஒலி/ஒளிபரப்பு நிகழ்ச்சியின் தலைப்பு :

என் பெயர் :

நான் பணிபுரியும் இடம் :

நான் உருவாக்கும் நிகழ்ச்சியின் கருப்பொருள் :

நிகழ்ச்சி வெளியாக உள்ள ஒலி / ஒளி ஊடகத்தின் பெயர் :

நான் வசிக்கும் இடம் :

ஒலி/ஒளி ஊடகம் ஒன்றுக்காக நான் ஒரு நிகழ்ச்சியை உருவாக்க விரும்புகிறேன். அதில் தங்கள் குழந்தையின் கருத்துகளோ தங்கள் குழந்தை பற்றிய காட்சிகளோ அடங்கியிருக்கும்.இது தொடர்பாக உங்களையும் நான் பேட்டி காண விரும்புகிறேன். நிகழ்ச்சியில் உங்களுடைய கருத்துகளும் இடம்பெறும். இந்த நிகழ்ச்சி ஒலி/ஒளி ஊடகம் ஒன்றில் வெளியாகும். இந்த நிகழ்ச்சியை பொதுமக்கள் பலரும் காண்பார்கள். அவர்களில் சிலர் உங்களுக்குத் தெரிந்தவர்களாகவும் உங்கள் குழந்தை அறிந்தவராகவும் இருக்கலாம். நிகழ்ச்சியில் உங்கள் பெயரோ அல்லது உங்கள் குழந்தையின் பெயரோ வெளியாவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் நான் உங்களுடைய பெயர்களை வெளியிட மாட்டேன். நிகழ்ச்சி வருவதற்கு முன் அதனை உங்களிடம் காட்டுவதற்கு தேவையான நியாயமான முயற்சிகளை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன். எனினும் எனக்கு காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படும் நிலையில் இது கண்டிப்பாகச் சாத்தியம் எனக் கூற முடியாது.நிகழ்ச்சியில் நீங்கள் வெளியிட விரும்பாத உங்களைப் பற்றிய அம்சம் எதுவும் இருந்தால் அதனை நீக்கி விடுவேன். விரும்பினால் நீங்களும் நிகழ்ச்சியில் பங்கேற்கலாம். உங்களுடைய குழந்தை குறித்த நிகழ்ச்சியை ஒலி/ஒளி ஊடகத்தில் வெளியிடவும் நீங்கள் அனுமதிக்கலாம். ஆதரவு திட்டம் ஒன்றின் அங்கமாக உங்கள் குழந்தை இருக்கும் நிலையில் குழந்தை பற்றிய நிகழ்ச்சி வெளிவரக்கூடாது என நீங்கள் நினைத்தால் அந்த திட்டத்தில் உங்கள் குழந்தையின் பங்கேற்பு குறித்து எதுவும் கூறப்பட மாட்டாது. நிகழ்ச்சியில் உங்கள் குழந்தை இடம்பெறும் காட்சி வெளியாவதிலும், உங்களை பேட்டி காண்பதிலும் உங்களுக்கு முழு உடன்பாடு உண்டு என்பதை உறுதி செய்வதற்காகத்தான் இந்த படிவத்தில் கையொப்பமிடுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். பேட்டியின் எந்த ஒரு இடத்திலும் நீங்கள் உங்கள் குழந்தையை விலகி விடுமாறு செய்யலாம். குழந்தை தொடர்புடைய காட்சிகள் வெளிவர அனுமதிப்பது என்பது உங்கள் விருப்பத்தை சார்ந்தது என்பதை நினைவில் கொள்ளவும். இந்த படிவம் அல்லது நிகழ்ச்சி குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் ______________________ என்கிற எண்ணில் என்னைத் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

## நிகழ்ச்சிக்காக குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வழங்கும் ஒப்புதல் வாக்குமூலம்

நிகழ்ச்சியில் என்னுடையை குழந்தையை பற்றிய தகவல், அவர் உள்ள காட்சிகளை வெளியிடுவதற்கு நான் சம்மதிக்கிறேன். இதற்கு பேட்டி காணவும் நான் சம்மதம் தருகிறேன்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் :

தேதி: